Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சுஜெ சித்த மருத்துவ நிலையம்

SUJAY SIDHA MEDICAL CENTRE

* மருத்துவ ஆலோசனைகள்
* சித்த மருத்துவ சிகிச்சைகள்

பெற்றுக்கொள்ள

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி - 83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P No 0777-737357, 0776-027948

(349)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 19 (22.05.2003) வியாழக்கிழமை இதழ்: 230

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து தேர்தலுக்கு முன்பே தலைவர் அறிவித்தார்

### நோர்வே அமைச்சருக்கு பாலா நீண்ட கடிதம்



(லண்டன்)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் தலைவர் பிரபாவின் யோசனைக்கு, பிரதமர் ரணில் தனது உத்தியோகபூர்வமான பதிலை வழங்கவேண்டும் என, நேற்று விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான கடிதம் ஒன்று, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தால் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கு வரையப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் - பிரதமரின் பதிலிலேயே சமாதானப் பேச்சுக்களின் மீள் ஆரம்பமும், ஜப்பான் உதவி மாநாட்டில் புலிகள் பங்கேற்பது குறித்த முடிவும் தங்கியுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,



(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் நிலைப்பாடு விரைவில் வெளியிடப்படும்!

### கூட்டமைப்பிடம் பிரதமர் உறுதியளிப்பு

(கொழும்பு)

வட - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கையாளக்கூடிய அதிகாரக் கட்டமைப்பு உருவாக்குவது குறித்து, நாம் ஆராய்ந்து வருகிறோம். மிக விரைவில், விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் மேற்படி அதிகாரக் கட்டமைப்பை அமைத்துக்கொள்வது தொடர்பான எமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்துவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மகாநாடு தொடர்பாகவும், வட - கிழக்கில் புனர்வாழ்வு நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான புதிய அதிகாரக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றும் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தனர்.

இரா.சம்பந்தன் தலைமையிலான (10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் முடிவை புலிகள் எதிர்பார்ப்பு

## ரோக்கியோ செல்வதும் அதிலேயே தங்கியிருக்கிறது

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு பிரதேசத்திற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்த தமது யோசனைகள் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவை அறிவிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

அடுத்த மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பான முடிவுக்கு, இது முக்கியத்துவம் பெறுவதாக, விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த மாநாட்டில், தமது பிரதிநிதிகள் பங்கேற்பதைத் தீர்மானிக்கும் விடயமாக, அரசாங்கத்தின் பதில் அமையுமென, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விரைவில் தமது கோரிக்கைகளுக்கு பதிலளிக்க வேண்


(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிசன் புறப்பட்டார்

(கட்டார்)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று முன்தினம் கொழும்பைவிட்டுப் புறப்பட்டதாகத் தெரிவித்த 'கல்வ் நியூஸ்' இணையத்தளம் - அவர், லண்டன் சென்று -

## விண்ணாணம் விநாசியர்



## உதவிப்பொருட்களுடன் புலிகள் தென்னிலங்கை பயணமாகினர்

தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் பொருட்டு, தமிழர் எழுச்சிப்பேரவை அமைப்பும், விடுதலைப் புலிகளும் இணைந்து - தமிழர் பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உதவிப் பொருட்களுடன் நேற்று மதியம் 11.30 மணியளவில் வவுனியாவிலிருந்து தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன்பரசன்

இதேவேளை, விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள இந்த மனிதாபிமான நடவடிக்கை, தென்னிலங்கை மக்களிடையே பெருவரவேற்பைப் பெற்றுள்ளதுடன், சர்வதேச செய்தி நிறுவனங்களும், இச்செய்தியை முக்கியத்துவப்படுத்தி வெளியிட்டுவருகின்றன. (01)

## தர்மபுரம் விபத்தில் இளைஞன் பலி!

கிளிநொச்சி - தர்மபுரம் பிரதான வீதியில் நேற்று நடைபெற்ற விபத்

# ஹெல்கிசன் புறப்பட்டார்

(கட்டார்)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று முன்தினம் கொழும்பைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.


விடுதலைப் புலிகளையும், பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த அவர் - கொழும்பைவிட்டுப் புறப்பட்டதாகத் தெரிவித்த 'கல்வ் நியூஸ்' இணையத்தளம் - அவர், லண்டன் சென்று - புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கலாம் எனவும் - ஆனால், இதனை உடனடியாகத் தெளிவாகக் கூறமுடியவில்லை எனவும் தெரிவித்துள்ளது.



இரத்தினபுரியில், ஹெலி மூலம் போடப்படும் உணவுப் பொருட்களை வெள்ள அகதிகள், போட்டிபோட்டு எடுத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



மனுசர் மட்டும்தான் பஸ்ஸில போறதா இதுவரைக்கும் கேள்விப் பட்டனாங்கள். இப்ப...?

## பின்னால் இருப்பவரும் 'ஹெல்மட்' அணியவேண்டுமாம்!

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணம் செய்யும் பயணியும், இனித் தலைக்கவசம் அணிய வேண்டுமென யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பகுதியில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்குடன், மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணம் செய்பவரும், இனிமேல் தலைக்கவசம் அணியவேண்டும் என்ற சட்டம், இன்றுமுதல் அமுலுக்கு வருவதாகவும், தவறும் பட்சத்தில் குற்றப்பணம் அறவிடப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (சு)

நேற்று மதியம் 11.30 மணியளவில் வவுனியாவிலிருந்து தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன்பரசன் ஆகியோரும் இந்த உதவிப் பொருட்களைக் கொண்டுசென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினர், நேற்றிரவு 10 மணியளவில் கொழும்பைச் சென்றடைந்தனர். இவர்கள் கொண்டுசென்ற பொருட்கள் - இரத்தினபுரி, அம்பேகமுவ பகுதிகளுக்கு இன்று கொண்டு செல்லப்படவுள்ளன.

யிட்டுவருகின்றன. (01)

## தர்மபுரம் விபத்தில் இளைஞன் பலி!

கிளிநொச்சி - தர்மபுரம் பிரதான வீதியில் நேற்று நடைபெற்ற விபத்தொன்றில், இளைஞன் ஒருவர் மரணமானார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

வேகமாக வந்த 'ஹையஸ்' வான ஒன்றும், துவிச்சக்கர வண்டியொன்றுமே இவ்விபத்தின்போது மோதிக் கொண்டன.

பிற்பகல் 2.15 மணியளவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஓடும் பஸ்ஸிலிருந்து மாணவியை உதைத்து வீழ்த்திய இளைஞன்!

## ஆவரங்கால் பகுதியில் சம்பவம்

(நவக்கிரி)

ஓடிக்கொண்டிருந்த மினிபஸ்ஸிலிருந்து இளைஞன் ஒருவன், வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவியை காலால் எட்டியுதைத்ததில், மாணவி கீழே வீழ்ந்து படுகாயமடைந்து, அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

தனியார் கல்வி நிறுவனத்திலிருந்து மாலை 7 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த பத்தாம் ஆண்டு மாணவியான அச்சுவேலியைச் சேர்ந்த துவாரகா என்பவர் மீது, அவரைத் தாண்டிச்சென்ற மினிபஸ் ஒன்றிலிருந்த இளைஞன் ஒருவன், காலால் எட்டி உதைத்துள்ளான். ஆவரங்கால் அருகே நடந்த இச்சம்பவத்தை கண்ணுற்ற அப்பகுதி மக்கள், அந்த மினிபஸ்ஸைத் தடுத்து நிறுத்தினர். எனினும், சம்பந்தப்பட்ட இளைஞன் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டார்.(10 ஆம் பக்கம் பார்க்க)


Expo Aviation (Pvt) Ltd.

EXPO Aviation

எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -911)

# வெள்ள அகதிகளுக்கு உதவ இந்தியா தயாராம்

## தூதுவர் உறுதியளிப்பு

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இந்தியா எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக இருப்பதாக, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை பிரதமரைச் சந்தித்தபோது, இந்த தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு, இந்தியா எந்த நேரத்திலும் தயாராக இருக்கின்றது. அரசாங்கம் மேலும் எந்த வகையான உதவிகளைக் கோருகின்றது எனத்தாம் எதிர்பார்த்திருப்பதாக இந்தியத் தூதுவர் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வழங்கிவரும் உதவிகளை, பிரதமர் இச்சந்திப்பின் போது பாராட்டினார். (01)


## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Sri Lanka

The Following courses Commence From 26th May 2003
Get Open University exemptions with Our Diplomas

**Diploma Courses**

- Diploma in Computer Programming & Data Processing
- Diploma in Draughtsmanship (Civil) Duration: 1 Year (Full time)
- Electrical Power
- Telecommunications and Electronics Duration:3 Years (Full time)

**Certificate Courses in Business & Scientific Applications**

- MS Word
- MS Excel
- MS Access
- Pascal
- C/C ++
- Visual Basic 6.0
- MS Power Point
- Computer Hardware
- JAVA
- Certificate Course in Printing Technology (Includes Adobe Page Maker, Corel Draw, Adobe Photoshop) Duration: 3-4 months

**NOTE**

- Member of Association of Computer Training Organisation (ACTOS)
- Educational Affiliate of British Computer Society
- Our Diplomas Guide the Students to the Examinations of the following bodies

ENGINEERING COUNCIL OF LONDON
CITY & GUILDS OF LONDON INSTITUTE
AUSTRALIAN COMPUTER SOCIETY (ACS)
BRITISH COMPUTER SOCIETY (BCS)

**Facilities**

- Library, Hostel & Sports

*Application forms are available at*

- JCIT, Vaddukoddai
- Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)

Emil:- jcit @ sltnet.lk

DIRECTOR
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

Tel.Phone: -070-213139

(சி-944)


# மூதூர் முரண்பாடுகள் தீர்க்க புலிகள் – முஸ்லிம்கள் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும், மூதூர் பிரதேச முஸ்லிம் பிரமுகர்களுக்குமான சந்திப்பு ஒன்று நேற்று காலை 11.00 மணிக்கு, திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை தலைவர் ஜான் டொன்ங் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளின் சார்பில், திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.திலக்கும், மூதூர் பிரதேச மஜ்லிஸ் இல் சூறா பிரதிநிதிகள் சார்பில் - அல்ஹாஜ் எம்.எம்.கரீம் மௌலவி தலைமையில் அல்ஹாஜ் எஸ்.எம். ஜவாத்தீன், அல்ஹாஜ் ஐ.எஸ். வகார்தீன், அல்ஹாஜ் கே.ஏ.ரகுமான், ஜனாப். எம்.ஏ.எம்.சாபீர், ஜனாப். எஸ்.எம். றசீட், ஜனாப்.எஸ்.எம்.நியாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் நான்கு மணி நேரமாக இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில், பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் முகமாக, ஒரு குழுவை அமைப்பது. இதில் விடுதலைப்புலிகளின் சார்பில் 4 பிரதிநிதிகளும், முஸ்லிம் மக்கள் சார்பில் 4 பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை காலமும் எவ்வித தடைகளுமின்றி, தமக்குரிய விவசாய காணிகளில் விவசாயம் மேற்கொண்டவர்கள், எவ்விதத் தயக்கமுமின்றி உடனடியாகத் தத்தமது காணிகளுக்குச் சென்று, தமது விவசாயத்தை மேற்கொள்ளலாம். இவ்வாறான காணிகள் எங்கு இருப்பினும், இந்நிபந்தனை ஏற்புடையதாகும். மேலும் குத்தகை சம்பந்தப்பட்டதும் பயிர் பண்ணப்படாததுமான காணிகள் தொடர்பாக எழும் பிரச்சனைகளை இக்குழு ஆராய்ந்து, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கடல் வலயங்களில் மீன் பிடிக்கலாம் எனினும் - ஆறுகள், குளங்கள், மற்றும் களப்புகளில் மீன் பிடித்தல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளை இக்குழு ஆராய்ந்து, பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்.

மக்கள் வழமையான தொழில் சார்பு நடவடிக்கைகளை எவ்வித அச்சமுமின்றி அன்றாடம் மேற்கொள்ளலாம் ஆகிய தீர்மானங்களே மேற்கொள்ளப்பட்டன. (04,10)

# காலிக்கு வந்த இந்தியக் கப்பலில் படையினரும் ஆயுதங்களுடன்!

(கொழும்பு)

வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, உணவுப் பொருள்களுடன் காலிக்கு வந்த இந்தியக் கப்பலில், ஆயுதம் தாங்கிய இந்தியப் படையினரும் வந்தனர்.

நேற்றுமுன்தினம் - பகலும், இரவும் இந்தியாவிலிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் விமானம், கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

இவ்வாறு உதவிக்கு வந்த கப்பலிலேயே ஆயுதங்களுடன் படையினரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (01)

# கிறிஸ்தவ ஆலயங்களுக்கு அமைச்சர் நிதி ஒதுக்கீடு

இந்துசமய விவகார அமைச்சரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரன், யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற கிறிஸ்தவ சமய தேவஸ்தானங்கள், கிறிஸ்தவ கலாசார அமைப்புக்கள், சேமக்காலைகள், தென்னிந்தியத் திருச்சபைகள், கன்னியர் மடங்கள், கத்தோலிக்க விடுதிகள், கத்தோலிக்க அநாதை மடங்கள் மற்றும் முன்பள்ளிகள் போன்றவற்றிற்கு நிதிகளை ஒதுக்கீடு செய்து, அவைகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள இவ்வாறான கிறிஸ்தவ சமய ஸ்தாபனங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் தங்களது சேதங்கள் சம்பந்தமான விபரங்களை, 27 ஆம் திகதிக்கு முன்பதாக தங்களின் பிரதேச கிராமசேவையாளரின் சிபார்சுடன், யாழ்.கச்சேரியிலுள்ள இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

ரஜனி, ரம்பா, சௌந்தர்யா

அருணாசலம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

CASTAWAY

(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின் நடித்த



புதிய கீதை

10.30, 2.30, 6.30

(சி-884)

22.05.1951 அன்று ஆரம்பிக்கப்பட்ட எமது ஸ்தாபனம் 53 ஆவது ஆண்டைக் கொண்டாடும் இந்நன்நாளில் வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

- T.V
- டெக்
- றேடியோ
- மணிக்கூடு
- மின்விசிறி
- விளையாட்டுப்பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அன்றும் இன்றும் என்றும் நன்மதிப்பைப்
பெற்று விளங்கும் ஒரே ஸ்தாபனம்



ராஜா ஸ்ரோர்ஸ்

67,69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0094-21-222-5224
இன்றே விஜயம் செய்யுங்கள்

WESTERN UNION மனி டிரான்ஸ்ஃபர்




உலகெங்கும் இருந்து பணத்தைப் பெற விரைவான வழி 190 நாடுகளில் இருந்து விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
யாழ்.நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.
பணம் மாற்றும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.

(சி-943)

# தென்னிலங்கை அரசியற் குழப்பநிலை விரைவில் சுமுகமாகத் தீர்க்கப்படும்!

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை



(கொழும்பு)

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு - சமாதான முயற்சிகள் துரிதமாக முன்னேற்றமடையும் என இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் கருதுவதாக, அவரது பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா தெரிவித்தார்.

தென்னிலங்கை அரசியல் குழப்பநிலை மற்றும் சமாதான முயற்சிகளில ஏற்பட்டிருக்கும் தேக்கம் என்பன குறித்து இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா தொலைபேசி மூலம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான கைத்தொழிற்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோருடன் உரையாடினார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின்போது - தென்னிலங்கை அரசியற்குழப்பநிலை விரைவில் சுமுகமாகத் தீர்மானிக்கப்பட்டுவிடும் எனத் தெரிவித்த பிரதமர் ரணில விக்கிரமசிங்க, சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து விளக்கமாக விபரித்தார்.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரெனப் பொறுப்பேற்றுக்கொண்டதால், ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட - பிரஜேஷ் மிஸ்ராவுக்கு விளக்கமாக எடுத்துக் கூறியதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் - இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியற் குழப்பங்களுக்குச் சுமுகமாகத் தீர்வு காணப்படவேண்டும் என விரும்புவதாகப் பிரஜேஷ் மிஸரா தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி உரையாடல் நீண்டநேரம் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

# கூட்டணி தொடர்பான இணக்கம் நாளை ஜே.வி.பி. மத்திய குழுவில்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக இறுதிமுடிவை எட்டியுள்ள ஜே.வி.பி, தனது முடிவுகளை கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் நாளை விவாதிக்கவுள்ளது.

நேற்றுமுன்தினம், சுதந்திரக் கட்சித் தலைவர்களுடனான கூட்டத்தில் இரு கட்சிகளும் அரசியல் கூட்டணியை அமைத்துக் கொள்வதற்கான இறுதி இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஜே.வி.பி மத்திய குழுவின் நாளைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். இதில் பிரதானமாக தேசிய முன்னணி ஒன்றை அமைப்பது, இரு கட்சிகளும் இணைந்து தேர்தலுக்கு முகம் கொடுப்பது, பொதுவான சின்னத்தைத் தெரிவுசெய்வது போன்ற விடயங்களே ஆராயப்படவுள்ளன எனத் தெரியவருகிறது.

# விற்பனை வாகனத்தை மறித்து ஒன்றரை லட்சம் ரூபா அபகரிப்பு

## அக்கரைப்பற்றில் சம்பவம்

குளிர்பானம் விற்பனை செய்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த விற்பனைப் பிரதிநிதி, சாரதி, உதவியாளர்களைத் தாக்கி - அவர்களிடமிருந்த ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா காசு மற்றும் காசோலைகள் இனந்தெரியாத ஆயுதம் தாங்கியவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் கல்முனை அக்கரைப்பற்றுப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் -

சாரதி ரகுமான் (வயது 50), உதவியாளர் சுதாகர் (வயது 21), விற்பனைப் பிரதிநிதி அபுநிசார் (வயது 30) ஆகியோரே தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (07)





தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள வீடொன்றையும் உயிரிழந்த பொதுமக்களின் சடலங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# கொக்கிளாய்ப் பகுதியின் கடல் வளங்களை உள்ளூர் மீனவரும் பயன்படுத்த அனுமதிக்குக

## திருமலை எம்.பிக்களிடம் பிரதேசவாசிகள் வேண்டுகோள்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் உள்ள கொக்கிளாய்க் கிராமத்தின் கடல் வளங்களை உள்ளூர் மீனவர்கள் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று, அப்பகுதி மக்கள் - திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரிடம் இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோரே இப்போது மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருப்பதுடன், கனரக வாகனங்கள் மூலம் இறால் மற்றும் மீன்வகைகள் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மீனவர்கள் இங்கு மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும் எனப் பிரதேசவாசிகள் விடுத்த கோரிக்கைக்கு நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காப்புறுதிக் கூட்டுத்தாபன விடயத்திலும் ஜனாதிபதி தலையிட்டிருக்க வேண்டும்

## ஜே.வி.பி. விசனம் தெரிவிப்பு

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை மீது ஜனாதிபதி சந்திரிகா எடுத்துள்ள அக்கறையை, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மீதும் வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்று ஜே.வி.பி. விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நோர்வே நிறுவனம் ஒன்றிடம் அபிவிருத்தி லொத்தர் சபை கையளிக்கப்படவிருந்த முயற்சிகளைத் தடுக்கவே ஜனாதிபதி சந்திரிகா தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அதைக் கையேற்றார். ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தச் செயலை ஜே.வி.பி. ஒருபோதும் எதிர்க்கவில்லை.

ஆயினும், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தியபோதும், இராணுவப் புலனாய்வாளர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகளை எடுக்காது, ஜனாதிபதி சந்திரிகா மௌனம் சாதித்தது வேதனைக்குரிய விடயமாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்டதால் எந்த விதமான அரசியலமைப்புச் சட்டச்சிக்கல்களும் ஏற்படவில்லை என்று ஜே.வி.பி. மேலும் தெரிவித்துள்ளது.

# வடக்கு - கிழக்கு பகுதி பாடசாலைகளில் 1944 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 1944 ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள 1823 பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க 3522 ஆசிரியர்கள் தேவை. ஆனால், தற்போது 1578 ஆங்கில ஆசிரியர்களே பணியாற்றி வருகின்றனர்.

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலுள்ள 24 கல்வி வலயங்களிலும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருகின்றது.

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் - ஆரம்பப் பாடசாலைகளில் 1618 ஆங்கில ஆசிரியர்களும், இரண்டாம் தரப் பாடசாலைகளில் 1388 ஆங்கில ஆசிரியர்களும் இருக்கவேண்டும்.

ஆனால், ஆரம்பப் பாடசாலைகளில் 1151 ஆங்கில ஆசிரியர்களும், இரண்டாந்தரப் பாடசாலைகளில் 626 ஆங்கில ஆசிரியர்களுமே பணியாற்றிவருகின்றனர். தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் மட்டும் 1229 ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருகிறது.

சிங்களமொழிப் பாடசாலைகளில் 516 ஆங்கில ஆசிரியர்கள் தேவையாக இருந்தபோதும், 349 பேரே பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளைக்குழுத் தேர்தல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 35 கிளைகளுக்குமான புதிய கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குக் குறிப்பிட்ட கிளைகளில் நடைபெற உள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (58)

# தேர்தல் நடத்தப்படாமலேயே ஒரே இரவில் ஆட்சி மாற்றம்!

## பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்

திடீரென ஒருநாள் காலை விடியும்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபீடத்தில் இருப்பதை விரைவிலேயே இந்த நாட்டு மக்கள் காணப்போகிறார்கள். அது எப்படி என்பது பரம இரகசியம் என மாத்தளை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

ரத்தோட்ட தேர்தல் தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி புனரமைப்புக் கூட்டத்திலே உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல யாலேகம தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், ஜனக பண்டார தென்னக்கோன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது கட்சியைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி எமது பரம எதிரி. அந்த எதிரியை அழிக்க எந்தச் சக்தியுடனும் கூட்டுச்சேர நாம் தயாராக இருக்கிறோம்.

ஜே.வி.பியின் கூட்டங்களில்கூட நான்தான் முதலில் மேடையேறிப் பேசினேன். நாம் அமைக்கப்போகும் அமைச்சரவையில் ஜே.வி.பிக்கு இடமளிப்பதா என்பது பற்றி இப்போது ஆராயப்படுகிறது.

அமைச்சரவையில் செயற்திறனற்ற சுதந்திரக்கட்சி அமைச்சர்களை வைத்திருப்பதைவிட, துடிப்பும், ஆர்வமும், மக்களுக்குச் சேவை செய்யும் திறனும் உள்ளவர்களை - அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாம் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்வோம்.

ஆறுமுகன் தொண்டமானையும் கூட அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளத் தயாராகவே உள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலின்போது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. கல்வி, பொருளாதாரம், கைத்தொழில், விவசாயம், உயர் கல்வி அனைத்தையுமே இவர்கள் பாழடித்துவிட்டனர்.

நாட்டிலுள்ள அனைத்தையுமே ஐக்கிய தேசியக்கட்சியினர் - புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டனர். சமாதானத்தைவிட அபிவிருத்தி லொத்தரே இலாபகரமானது என அரசாங்கம் வந்துவிட்டது. இப்போதுதான் ஜனாதிபதியின் உண்மை அதிகாரத்தையும் அதன், பெருமையையும் அவர்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் ஒன்றை நடத்தாமலேயே நாங்கள் ஒரே இரவில் ஆட்சியை மாற்றியமைப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

# யாழில் 'நியாப்' திட்டச் செயற்பாடுகள்; இன்று செயலகத்தில் வேலைப்பட்டறை!

நியாப்பின் திட்டமிடல் மற்றும் திட்டம் செயற்படுத்தல் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்காகத் துரித மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வு பற்றிய வேலைப்பட்டறை இன்று யாழ்.செயலகக் கேட்போர் கூடத்திலே நடைபெறவுள்ளது.

யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், வவுனியா வளாக வணிகக்கல்விப் பீடாதிபதி இ.நந்தகுமார் ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ளவுள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில்,

'நியாப்' தொழில்நுட்பப் பணிப்பாளர் சீ.மனோகரன் நியாப்பின் கோட்பாடுகளும், செயற்பாடுகளும், வேலைப்பட்டறையின் நோக்கமும் என்னும் தலைப்பிலும்,

யாழ். மாவட்டத்தில் நியாப்பின் நீர்ப்பாசன கட்டுமாணப் பொறியியற் கோட்பாடுகள், கட்டுமாண அமைப்பு முறைகள், திட்டச் செயற்பாட்டு ஒழுங்கமைப்பு ஆகியன பற்றிய துரித மதீப்பீட்டுக் குழுவின் அவதானிப்புகள் மற்றும் அவற்றினை ஒழுங்குபடுத்துவதற்கான சிபார்சுகள் என்பன தொடர்பாகக் குழு உறுப்பினர் மு.இரத்தினம், பொறியியலாளர் எஸ்.சபாரெத்தினம் ஆகியோரும்,

மையக் கிராமங்கள், சமூக வலுவூட்டல், கிராமமட்ட அமைப்புக்கள், ஜீவனோபாய திட்டம் பற்றிய நியாப்பின் கோட்பாடுகள், திட்ட செயற்பாட்டு ஒழுங்கமைப்புப் பற்றிய குழுவின் அவதானிப்புகளும், சிபார்சுகளும் என்பது தொடர்பாகக் குழுவின் தலைவர் பெ.விக்னேஸ்வரன், குழு உறுப்பினர் கலாநிதி ந.சண்முகலிங்கம் ஆகியோரும் கருத்துக்களை வெளியிடவுள்ளார்கள். (சு)

## மனைவியைக் கொலை செய்தவருக்கு 20 வருடச் சிறைத் தண்டனை

### தமிழீழ நீதிமன்று விதித்தது

மனைவியைக் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்த நபருக்கு முல்லைத்தீவு தமிழீழ மேல் நீதிமன்றம் 20 வருடச் சிறைத் தண்டனையையும் 50 ஆயிரம் ரூபா குற்றப் பணமும் தண்டனையாக விதித்துத் தீர்ப்பளித்தது.

2002 ஆம் ஆண்டு முள்ளியவளையில் இடம்பெற்ற இக்கொலைச் சம்பவம் தொடர்பாக, கடந்த 14 ஆம் திகதி முல்லைத்தீவு மேல் நீதிமன்ற நீதிவான் இ.கலையரசியினால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (122)

## வெள்ள அகதிகளுக்கு யாழ்.முஸ்லிம்கள் உதவி

கடந்த சில நாட்களாகத் தென் பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் முகமாக யாழ்.முஸ்லிம் மக்களினால் ஒரு தொகுதி அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். முஸ்லிம் பள்ளிவாசலில் நடைபெற்ற நிகழ்வில் - யாழ்ப்பாண முஸ்லிம்களின் வணிகநிலையங்களில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி பால்மா வகைகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக, யாழ். நல்லூர்க் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனிடம் கையளிக்கப்பட்டதாக புதிய பள்ளிவாசல் மௌலவி தெரிவித்தார். (சு,ரா)

## பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு வடமராட்சியில் பொருள்கள் சேகரிப்பு

(வல்வெட்டித்துறை)

தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக, உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்களை வடமராட்சி வெகுஜன ஒன்றியம் - பொது மக்களிடமிருந்து திரட்டி வருகிறது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடிப் பகுதி வர்த்தக நிலையங்களிலேயே இப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஒலிபெருக்கி மூலமாகவும், அப் பகுதி மக்களுக்கு உதவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

## நிப்பொன் கல்வி கலாசார நிலைய புலமைப் பரிசில் கொடுப்பனவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான, "சிறீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலைய - ஏப்ரல், மே மாத புலமைப் பரிசிலுக்குரிய கொடுப்பனவுகள் கடந்த 19 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலை அதிபர்களோ அல்லது பொறுப்பாசிரியர்களோ யாழ்ப்பாண நிலைய இணைப்பாளரான மத்திய கல்லூரி அதிபரிடமிருந்து மாணவர்களுக்குரிய கொடுப்பனவு வவுச்சர்களை, காலதாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்!

இலங்கையில் இயங்கும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் வூல்டர் வில்ரன் நாளைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ரோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக, தற்போதைய யாழ்.நிலவரங்களை மதிப்பீடு செய்வதற்காக, அவரது யாழ்.விஜயம் அமையும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். விஜயத்தின்போது இராணுவ அரச அதிகாரிகள், மனித உரிமை குழுக்களின் பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ்.ஆயர் ஆகியோருடன் சமாதான நடவடிக்கைகள், புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.

இவர், நாளை மறுதினம் வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என்றும் தெரியவருகிறது.

### கண்டெடுத்த பணம் நீதிமன்றத்தில்

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் ஒரு தொகைப்பணம் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டு, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆச்சிரம சிறுவர்களுக்கு அன்பளிப்பு

இரண்டாவது உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு, வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம சிறுவர்களுக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக நலன்புரிச்சங்கம் ஒரு தொகை பாடசாலை உபகரணங்களைக் கடந்த திங்கட்கிழமை வழங்கியதாகப் பிரதேச செயலர் க.சிவபுண்ணியம் தெரிவித்தார்.

### யாழ். வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ். வலயமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றுமுதல் நாளை மறுநாள் வரையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, யாழ் வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரி ராஜா தெரிவித்தார். (58)

### சாவகச்சேரிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி

சாவகச்சேரிப் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாக ம.குமாரவேலு, நீதிச்சேவை ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக இப் பகுதிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி எவரும் நியமிக்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணி

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இரண்டாம்கட்ட விடைத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூன் 10 ஆம் திகதி வரையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. மேற்படி தினங்களில் யாழ். மத்திய கல்லூரியின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வித தடங்கலுமின்றி நடைபெறும் என யாழ்.மத்திய கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (58)

### காணி விபரம் திரட்டும் கூட்டம்

கைதடி, தனங்கிளப்பு, நாவற்குழி, மறவன்புலவு ஆகிய பகுதிகளில் விவசாயத்தை மேற்கொள்வது தொடர்பாகக் காணி விவரங்களைத் திரட்டுவதற்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக விவசாய நில மீட்பு ஒன்றியம் அறிவித்துள்ளது.

### சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "பகவத்கீதை" தொடரில் யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். (17)



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் முறைசாராப் பிரிவினால் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு நடாத்தப்படும் கணினி பயிற்சி வகுப்பை, வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.ஸ்ரீபதி ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் கணினிப் பயிற்சி நிலையத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.



ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், பாடசாலை அதிபர் ச.திரவியராசா, வடமராட்ச கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

### சங்கானை சுகாதார அதிகாரி பிரிவில்

## சுகாதார நிலையம், விடுதிக்கு இரு காணிகள் அன்பளிப்பு

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் புதிய ஆரம்ப சுகாதார நிலையமும், குடும்ப சேவையாளர் விடுதியும் அமைப்பதற்கென பொது அமைப்புக்கள் இரு காணிகளை வழங்கியுள்ளன.

இதிலொரு காணி சங்கானை சுகாதாரப் பிரிவிலும், மற்றைய காணி வட்டுக்கோட்டைப் பகுதியிலும் அமைந்துள்ளது. இதேவேளை, சங்கானை சுகாதாரப்பிரிவில் பண்ணாகம் பகுதியில் மட்டும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காணி கிடைக்கும் பட்சத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத்தரப்படும் என ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (43)

## வெடிவிபத்துகளில் சிக்கி இரண்டு பேர் படுகாயம்!

நடைபாதையைவிட்டு குறுக்கு வழியாகச் சென்ற இளைஞன் மிதிவெடியில் சிக்கி காயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பகல் வெற்றிலைக்கேணி - பனிக்கையடியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் பிரதீபன் (வயது 23) என்பவரே வலது காலில் பலத்த காயமடைந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இடைக்குறிச்சி - வரணியில் துப்பாக்கிக் குண்டை பரீட்சித்துப் பார்த்த போது கணேஷ் (வயது 16) என்ற சிறுவன், அது வெடித்ததில் இரண்டு கையிலும் பலத்த காயமடைந்துள்ளார். (121)

## மேலும் ஐந்து கிராமங்களில் மீள்குடியமர்வு கொடுப்பனவு

(வடமராட்சி)

வடமாராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐந்து கிராமசேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடத்தனை வடக்கு, பொற்பதி குடத்தனை தெற்கு, மணற்காடு ஆகிய பகுதிகளுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 67 குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சூறாவளியால் பாடசாலை சேதம்

(நவிண்டில்)


அண்மையில் வீசிய மினி சூறாவளியால் கரணவாய் மகா வித்தியாலய மேல்மாடிக் கட்டடத்தின் கூரையும், மலசலகூடத் தொகுதியின் கூரையும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

# விளைச்சலை அதிகரிக்கும் உயிர்த் தொழில்நுட்பம்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

மரபுமுறையான (வழக்கத்திலுள்ள) காய்கறிப்பயிர் இனவிருத்தி (Conventional vegetable breeding) நுட்பங்கள் (Techniques) பலவுள்ளன. இந்நுட்பங்கள் அபிவிருத்




மரபணுப் பரிசோதனையில் ஈடுபடும் விஞ்ஞானிகள்

தியடைந்த, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தாவரவிருத்தி வித்தகர்களால் மிகவும் கவனத்துடனும், ஒழுங்குமுறையாகவும் கையாளப்படுகின்றன. தாவர அல்லது பயிர் இனவிருத்திச் செயற்பாட்டின் முக்கிய நோக்கம் - அறுவடை செய்யும் பயிர்களின் விளைச்சல் (Yield), தரம் (Quality) என்பவற்றை அதிகரிக்கச் செய்தலாகும். தாவரத்தின் அமைப்பும் (Plant Architecture), பருமனும் (Size) அதன் விளைச்சலில் ஆட்சி செலுத்துகின்றன. தாவரமானது நோய், பீடை தாக்கங்களிற்குச் சிறந்த எதிர்த் தாக்கத்தினைக் கொண்டிருக்குமானால், அவை பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பல்வேறு தாக்கங்களுக்குச் சகிப்புத் தன்மையினை விருத்தியாக்க மேற்கொள்ளப்படும் இனவிருத்திச் செயற்பாடு ஒரு முக்கியமானதாகும். இவ்வாறான எல்லா இயல்புகளையும் (Characters) தாவர விருத்தி வித்தகர்கள் கருத்திற்கொண்டு செயற்படுவார்கள்.


தாவர இனவிருத்தியில் உள்ளடக்கிய தாவரங்கள் இரு வகைப்படும். அவையாவன - இயற்கையான உள்விருத்தியானவையும் (Inbreeders), வெளிவிருத்தி மூலமாக இனம் பெருக்குபவைகளும் (Outbreeders) ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் பயிர் - தன்மகரந்த சேர்க்கையுடையதாயின் (உதாரணம் - நெல், தக்காளி, வெண்டி, அவரை) மேற்கொள்ளப்படும் இனவிருத்திமுறையானது அயன் மகரந்த சேர்க்கையில் ஈடுபடும் பயிரிலிருந்து (உதாரணம் - சோளம், வெங்காயம், கரட்) வேறுபடும். அவைகளைப் பற்றிய விபரங்கள் இந்தக் கட்டுரையின் ஆசிரியர் வெளியிடப்பட்ட "காய்கறிப்பயிர் இனவிருத்தி" எனும் நூலில் தரப்பட்டுள்ளன. இவை அறிவு பூர்வமான செயல்முறைநுட்பங்களாகும். பலவகையான சோதனை நடவடிக்கைகள், கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் தேர்வுகள் - நீண்டகால நோக்கில் ஒரு புதிய இனத்தை உருவாக்கத் தேவைப்படுபவையாகும்.

தரமான தாவர இனவிருத்திச் செயல்முறையானது-



உயிர்த்தொழில்நுட்பம் மூலம் உற்பத்தியான பழங்கள்

கலையுடன் கூடியதும், விஞ்ஞானரீதியிலுமான ஒரு செயற்பாடாகும். உதாரணமாக - ஒரு காலப்பயிரான தக்காளியை எடுத்துக்கொண்டால் - அதன நடவடிக்கைகள் நிறைவேற



உயிர்த்தொழில்நுட்பப் பொறிமுறையின் ஒரு பகுதி.

நம் நாட்டில் குறைந்தது ஆறு வருடங்களாவது தேவைப்படும். இவ்வாறானநிலையில் காலத்தைக் குறைக்கவும், தாவர இனவிருத்தியைப் பலப்படுத்தவும் பல புதியநுட்பங்கள் (Innovative Technologies) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன -

- ✦ ஒரு மடியம் இனவிருத்தி (Haploid breeding).
- ✦ கலம் கலப்புப் பிறப்பாக்கம் (Somatic hybridisation).
- ✦ இழையவிருத்தி (Tissueue Culture)
- ✦ பரம்பரை அலகு மாற்றுகை (Genetic engineering)

இப்புதிய உயிர்த்தொழில் நுட்பங்களை (Bio Technology) ஒழுங்கான முறையில் மிகவும் கவனத்துடன் செயல்படுத்தல் அவசியம். இவைகளை மரபுமுறையான இனவிருத்தி நுட்பங்களுடன் ஒன்றிணைத்துச் செயற்படுத்தினால் எமது நோக்கு துரிதமான பாரிய வெற்றியை அடையும் என்பது நிச்சயம். ஆனால் இப்புதிய உயிர்த்தொழில் நுட்பங்களை - தவழும் குழந்தையின் நிலைக்கே ஒப்பிடலாம். அத்துடன், இவைகளில் பல இன்னும் பரிசோதனை நிலையில்தான் உள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இழைய வளர்ப்பு, பிறப்புரிமைப் பொறியியல் நுட்பங்களை பிரயோகித்து புதிய தாவரங்களைப் பெறும் முயற்சியில் வெற்றியடைந்துள்ள அதேவேளை, மூன்றாம் உலக நாடுகளில் புதிய உயிர்த்தொழில் நுட்பங்களை நடைமுறையில் பாவிப்பதற்குப் பல வரையறைகள் உள்ளன. ஏனெனில், இவைகளுக்குப் பெறுமதிமிக்க ஆய்வுக்கூட வசதிகளும் இன்றியமையாதன. எவ்வாறாயினும், இத்தகைய தொழில்நுட்பங்கள் - தாவர இனவிருத்தியில் முன்னேறிச்செல்லும் செயன்முறைகளுக்கு அத்தியாவசியமாகும்.

கட்டுரையாக்கம்
பயிரியல் பேராசிரியர் வை. அருள்நந்தி,
கிழக்குப் பல்கலைக்கழகம்.
தருவது:-
தகவல் தொடர்பு மையம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 30/= | 60/= | 70/= | 50/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 65/= | 60/= | 60/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 50/= | 50/= | 50/= | 45/= | 50/= | 50/= |
| பாகற்காய் | 60/= | 40/= | 60/= | 40/= | 80/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 30/= | 35/= | 35/= | 20/= |
| முருங்கைக்காய் | 30/= | 60/= | 40/= | 60/= | 60/= | 40/= |
| கரட் | 40/= | 60/= | 40/= | 60/= | 50/= | 50/= |
| பீற்றூட் | 25/= | 30/= | ✱ | 40/= | 50/= | 30/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 40/= | 40/= | 40/= | 35/= |
| பச்சைமிளகாய் | 30/= | 40/= | 30/= | 50/= | 50/= . | 30/= |

# தொழில் வங்கி



| நிறுவனம். | UNDP<br>வவுனியா | JICA<br>ஜப்பானிய உதவி முகவரகம் | அரசகரும மொழி ஆணையாளர் | TRRO<br>யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள். | நிதி / நிர்வாக உதவியாளர் | கணக்கியல் உதவியாளர் | 1. மொழி உத்தியோகத்தர்.<br>2. நிர்வாக உத்தியோகத்தர்.<br>3. சிரேஷ்ட எழுதுநர்.<br>4. சுருக்கெழுத்தாளர் (ஆண்கள்). | 1. குழு இணைப்பாளர்.<br>2. திட்ட முகாமையாளர்.<br>3. சமநிலை உத்தியோகத்தர். |
| அடிப்படைத் தகுதிகள். | பல்கலைக்கழகப்பட்டம் (நிதி / பொது நிர்வாகம்) | AAT, CIMA III | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டச்சான்றிதழ், தொழில் முன்னனுபவம் | விஞ்ஞானம், முகாமைத்திறமை, பாடநெறியில் பட்டச்சான்றிதழ். |
| விண்ணப்ப முடிவு திகதி. | 28.05.2003. | 24.05.2003. | 10.06.2003. | 30.05.2003. |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# தரமான தளபாடங்களை உற்பத்தி செய்வதே எமது நோக்கமும் இன்றைய தேவையுமாகும்

**உயர்தரக் கல்வியை முடித்துவிட்டு ரிங்கர் வேலையைப் பழகிய வே. சிறிஸ்கந்த ராசா - யாழ்ப்பாண மாநகர சபை வேலைப்பகுதியில் கடமையாற்றிய பின்னர், சுயதொழில் முயற்சியில் ஈடுபடவேண்டுமென்ற விருப்பத்தினால், தற்பொழுது E.U.T என்னும் Equipment Unit Trust தளபாட உற்பத்தி நிறுவனத்தினை நடாத்தி வருகின்றார்.**

**'நமது ஈழநாடு' அவருடனான சந்திப்பினை மேற்கொண்டபோது...**



**நீங்கள் இந்த தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான காரணம் யாது?**

நான் 1985 ஆம் ஆண்டு உயர்தரம் படித்து முடித்துவிட்டு, இரும்புத் தொழிற்சாலையில் ரிங்கர் வேலையைப் பழக ஆரம்பித்தேன். ரிங்கர் வேலையை நான்





பழகும்போதே அதில் எனது திறமையை வெளிக்கொணர வேண்டும் என்ற நோக்கத்துடன் வேலையைப் பழகிவந்தேன்.

அதனால், 1990 ஆம் ஆண்டு இரும்புத் தளபாடங்களை உற்பத்திசெய்யும் வேலையில் காலடி எடுத்து வைத்தேன் என்று சொல்லலாம்.

தளபாட உற்பத்தியை ஆரம்பிக்கும் போதே நாட்டின் சூழ்நிலை மிகவும் பாதகமாக இருந்தது. தளபாடங்களை உற்பத்தி செய்யவேண்டிய தகரங்கள் கொழும்பிலிருந்து கொண்டுவரமுடியாது தடைப்பட்டது. அப்படி இருந்தபோதும் எங்களது உள்ளூர்த் தொழில்நுட்பம் வளர வேண்டுமென ஓர்மத்துடன் நான் அதேதொழிலில் தொடர்ந்து நின்றேன்.

**நீங்கள் அதேதொழில் முயற்சியில் தொடர்ந்து இருக்கக் காரணம் யாது?**

இந்தத் தொழிற்துறையிலே திறமையானவர்கள் ஒரு சிலரே இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் தங்களது திறமைகளைத் தம்முடன் நிற்கும் தொழிலாளர்களுக்குப் பயிற்றுவிப்பதில்லை. அவ்வாறு தொழிலைப் பழகிவிட்டால் அவர்கள்



தம்மைவிட்டு வெளியேறிச் சுயமாகத் தொழில் முயற்சியை ஆரம்பிப்பார்கள். அவ்வாறு செய்தால் தமக்கு நஷ்டம் ஏற்படும் எனத் தொழில்முயற்சியாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு இவர்கள் கருதுவதால் எங்கள் நாட்டிலே வினைத்திறனாகத் தொழில் செய்யக்கூடிய தொழிலாளர்களை நாம் தொடர்ந்தும் பேணிவரமுடியாத சூழ்நிலைதான் ஏற்படுகின்றது.

எனவேதான், நாட்டுச் சூழ்நிலை மிகவும் பாதகமாக இருந்தபோதும், நான் தொடர்ந்தும் இந்த தொழில்முயற்சியில் ஈடுபட்டு வந்தேன்.

**சுன்னாகத்தில் இயங்கும் தங்களது E.U.T. தொழிற்சாலை எப்போது ஆரம்பித்தீர்கள்? எத்தனை தொழிலாளர்கள் தங்களுடன் வேலைசெய்கின்றார்கள்?**

கடந்த நவம்பர் மாதமே E.U.T. தொழிற்சாலையை ஆரம்பித்தோம். தற்பொழுது இருபது தொழிலாளர்கள் எம்முடன் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் எமது உற்பத்திகளை மக்கள் கொள்வனவு செய்வதற்காக கே.கே.எஸ். வீதியில் ஒரு காட்சியறையினையும் திறந்துள்ளோம்.

**உங்களது இரும்புத்தளபாட உற்பத்திகளை எதிர்காலத்தில் எவ்வாறு விருத்தி செய்வது எனத் தீர்மானித்துள்ளீர்கள்?**

எமது உற்பத்திகளின் தரத்தினைத் தொடர்ச்சியாகப் பேணுவதன் மூலமே நாம் எமது முயற்சியை விருத்திசெய்யலாம் எனக் கருதுகிறேன். எமது நிறுவன உற்பத்திகள்



தொடர்ச்சியாகத் தரம் மிக்கதாக இருப்பதன் மூலம், மக்களின் அங்கீகாரம் எமது உற்பத்திகளுக்கு என்றும் உண்டு என்பதில் நான் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.

**தற்போதைய சமாதான சூழ்நிலையில் A-9 பாதை (கண்டி வீதி) திறந்ததன் பின்னர் எவ்வாறான சவால்களையும், சந்தர்ப்பங்களையும் நீங்கள் எதிர்கொண்டுள்ளீர்கள்?**

சவால் என்று பார்க்கையில் - கொழும்பில் பாரிய அளவில் உற்பத்திகளை மேற்கொண்டு வரும் இரும்புத் தளபாட உற்பத்தி நிறுவனங்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் விற்பனைகளை மேற்கொண்டு வருகின்றன. இவர்களது உற்பத்தித் தரம் - ஒப்பீட்டுரீதியில் எமது உற்பத்தித் தரத்திலும் குறைவாகக் காணப்படுகின்றன. அதேவேளை, விலையும் எமது உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும்போது கொழும்புப் பொருட்களின் விலைகள் குறை



வாகவே காணப்படுகின்றன.

இதனால், தளபாடங்களின் கேள்விமுறையில் (Tender) கொள்வனவு செய்யும் அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பாடசாலைகள் குறைந்தவிலைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனவே தவிர, உற்பத்திப் பொருட்களின் தரத்தை கருத்தில் எடுப்பதில்லை.

**இந்தவகையில் எமது பல உற்பத்திப் பொருட்களும் பலத்த சவால்களை எதிர்கொண்டுள்ளன. இந்தச் சவால்களை எவ்வாறு முறியடிக்கலாம் என்று கருதுகின்றீர்கள்?**

எமது உற்பத்திகளின் தரத்தினை நாங்கள் ஒவ்வொரு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனத்திற்கும் நேரில் செனறு விளங்கப்படுத்தி வருகின்றோம். விலையை மட்டும் கேள்விப்பத்திரத்தில் கருத்தில் எடுக்கத் தேவையில்லை, பொருளின் தரத்தின் அடிப்படையிலும் அவற்றினை அரசதிணைக்களங்கள் கொள்வனவு செய்யலாம் என்பதைச் சொல்லிவருகின்றோம்.

இந்தவகையில் எமது தளபாடங்களின்



தரத்தினை நாம் - அவர்களுக்கு நேரில் விளங்கப்படுத்திவருகின்றோம்.

அடுத்ததாக, எமக்கு, குறிப்பாக நீண்ட யுத்த அவலங்களுக்குப் பின்னர் எமது பிரதேசத்தில் உள்ளூர் உற்பத்திகளில் தொழில் முயற்சிகளைச் செய்துவரும் தொழில்முயற்சியாளருக்கு - புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான பிரிவுகள் திணைக்களங்கள் உதவிகளைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

எமது பிரதேசத்துக் கைத்தொழிலை மேம்படுத்த சிறுகைத்தொழில் மற்றும் கைத்தொழில் தொடர்பான அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் இதில் பெரும் பங்குண்டு. இவர்கள் இலகு தவணைக்கடன்களை, வட்டி குறைந்த கடன்களை எமக்குத் தரவேண்டும். அத்துடன், மானியம் அளிக்கப்பட்டு, மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அவற்றினைவிட, எமது பிரதேசத்து வங்கிகள் இலங்கை பூராகவுமுள்ள சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்துக்கொணடு, இங்கும் வங்கிக்கடன் தொடர்பான பல நிபந்தனைகளை வைத்திருக்கின்றார்கள். இதனை மாற்ற வேண்டும். எமது பிரதேசத்து வங்கி முகாமையாளர்கள் - தங்கள் தலைமையகத்துடன் எமது பிரதேசத்திற்கு என விசேடமான சலுகைகளையளிக்க வேண்டும் என்பதனைக்



கோரவேண்டும். அவ்வாறான ஒழுங்குகளைச் செய்து எமக்கு - வங்கிகள் எம்மை ஊக்குவிக்கும் வகையில் கடன் வசதிகளை மேற்கொள்ளவேண்டும்.

**வட - கிழக்கு மக்களுக்கு நீங்கள் ஒரு தொழில் முயற்சியாளன் என்ற வகையில் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

எமது மக்களுக்கு இரும்புத் தளபாடக் கொள்வனவு தொடர்பாகச் சில ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். அதற்காக எல்லோருக்குமே இரும்புத் தளபாடக் கொள்வனவு தொடர்பில் ஒன்றும் தெரியாது என்று கூறிவிடவும் முடியாது.

இரும்புத் தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் முன்பு, எமது மக்கள் (கொள்வனவாளர்கள்) எம்மைப் போன்ற உற்பத்தியாளர்களிடம் ஆலோசனைகளைக் கேட்கலாம்.

ஏனெனில், பாரம்பரியமாக மரத்தளபாடங்களைத்தான் எமது மக்கள் கொள்வனவு செய்துவந்தார்கள். அண்மைக் காலமாகத்தான் இரும்புத் தளபாடங்களை எமது மக்கள் வாங்குகின் றார்கள். எனவே, அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை எமது காட்சியறைகளில் நாம் சொல்லுவோம்.

அத்துடன், மக்கள் தமக்கு எவ்வாறான மாதிரித் தளபாடங்கள் தேவை என்று கூறினால், அவர்களது விருப்பத்திற்கு இணங்க குறித்த தவணையில் நாம் உற்பத்தி செய்து கொடுக்கத் தயாராகவும் இருக்கின்றோம்.



இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தளபாடத்தினைக் கொள்வனவு செய்ய வரும் மக்கள் - இத்தளபாடங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதனை நேரில்வந்து, உற்பத்தி நடக்கும் தொழிற்சாலைகளில் பார்க்கவேண்டும்.

**நேர்காணல் -**
**சேந்தன், விக்கி.**


# ஒரு உயர்வுக்குப் பின்னால்....!

**தமிழர் தாயகமெங்கும் உயர்வுற்று வாழும்**



- தொழிலாளர்கள்
- வர்த்தகர்கள்
- ஆற்றல்மிகு கடற்தொழிலாளர்கள்
- தொழில் முயற்சியாளர்கள்
- திறமையான விவசாயிகள்
- இன்னும் ஏனையோரும்

தாங்கள் உயர்ந்துவந்த பாதையை - 'நமது ஈழநாடு' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பு.



சுயவிபரத்துடன் - சாதித்த இலக்குகளைக் குறிப்பிட்டு
**'ஒரு உயர்வுக்குப் பின்னால்...!'**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடன் தொடர்புகொள்ளுங்கள்.
நாங்கள் உங்களுடன் நேரில் கலந்துரையாடியதும், ஒவ்வொரு வாரமும் 'உழைப்போம் உயர்வோம்' தொழில்மலர் பகுதியில் உங்கள் வெற்றிக்கதை பிரசுரமாகும்.
எங்கே தயாராகி விட்டீர்களா?
உங்கள் வெற்றி ஏனையோருக்கும் வழிகாட்டட்டும்!

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
நண்புஆற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் நடை!
- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## மனிதநேயத்தின் வெளிப்பாடு!

தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எழுநூறுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். இன்னும் பலர் எங்கே எனத் தெரியாது காணாமற்போய்விட்டிருக்கின்றனர்.

அண்மைக்காலங்களில், இலங்கையில் ஏற்பட்ட மிகப்பெரும் இயற்கையழிவான இப்பிரளயத்தில் - தெற்கின் பல மாவட்டங்களும் பெரும் சேதங்களைச் சந்தித்திருப்பதோடு - பல பகுதிகள் இன்னமும் எவ்விதத் தொடர்புமற்று துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கடும்மழை காரணமாக உருவான வெள்ளப்பெருக்கு ஒருபுறமும், மண்சரிவு மறுபுறமுமாக - மக்கள் தங்குவதற்கு இடமின்றிப் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தெற்கு சந்தித்துள்ள இந்த இயற்கையழிவுகளினால - பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக - தமிழர்களும் பெருமெடுப்பில் மனிதாபிமான உதவிகளை வழங்கிவருவதாகவும், குறிப்பாக - விடுதலைப் புலிகள் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்காக உணவுப் பொருள்களையும், உடுபுடைவைகளையும் அனுப்பிவைத்திருப்பதாகவும் கொழும்பு ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இந்த மனிதாபிமான உதவி - தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனியே உதவியாக மட்டுமல்லாது - பல செய்திகளையும் காவிச் சென்றிருக்கின்றது.

கடந்த காலங்களில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை - சிங்க மக்களுக்கெதிரான யுத்தமாகவும், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் உருவாக்கிக் காட்டிய அரசியல், இனவாத சக்திகள் இன்னமும் நீங்கிவிடாத பூமிக்கு -

விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்திருக்கின்ற உதவிகள் - மனித நேயத்தையும், தவறுகளைப் பொறுத்துவாழும சகிப்புத்தன்மையையும், உயர் மனித விழுமியங்களையும் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சென்றிருக்கிறது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் - சிங்கள மக்களிடம் தமிழர்கள் மீதான இனத்துவேஷத்தையே கடந்த காலங்களில் சிங்கள அரசியல்வாதிகளும் மத அமைப்புக்களும் ஊக்குவித்து வளர்த்து வந்தன.

காலத்துக்குக் காலம், தமிழ் மக்கள்மீது இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டபோது - சிங்கள மக்களிடையே இந்த இனத்துவேஷம் இன்னமும் கிளர்ந்தெழச் செய்யப்பட்டது.

தமிழ்மக்களை அரச பயங்கரவாதமும், இராணுவ ஒடுக்குமுறையும் அழுத்தியபோதும் - அதனை இனவிரோதத்தின்பால் தக்கவைத்திருக்கவே பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதில் சிங்கள அரசியல்வாதிகள் வெற்றிகளையும் பெற்றனர்.

அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படும்போது - விடுதலைப் புலிகளே பலியாவதாகவும், தமிழ் மக்களின் குடிமனைகள் சிதைத்தழிக்கப்படும்போது, புலிகளின் பாசறைகளே அழிக்கப்பட்டதாகவும் கட்டிவிடப்பட்ட கதைகளைத் தென்னிலங்கை மக்களும் நம்பினார்கள்.

தமிழர்களுக்கெதிரான போர் - தெற்கில் வாழும் மத்தியதர மற்றும் பொருளாதார ரீதியில பெரும் சிரமங்களைச் சந்தித்த கீழ்வர்க்க இளைஞர்களுக்கான பெரும் வேலைவாய்ப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டதும், பிரசாரப்படுத்தப்பட்டதும் - அதுவேறு சிங்கள மக்களை மகிழ்ச்சிப்படுத்தியது, இராணுவத்தில் இணைய வைத்து வட - கிழக்குப் போர்க்களங்களுக்கு அவர்களை அனுப்பி வைத்தது.

ஆனால், போரின் தீவிரத்தால் கருகிப்போன, அடையாளம் காணமுடியாத சடலங்களாக - சிங்கள இளைஞர்கள், தெற்குக் கிராமங்களுக்குச் சவப்பெட்டிகளில் கொண்டுவரப்பட்டபோதே - அவர்களுக்கு உண்மையின் பரிணாமம் புரியத் தொடங்கியது.

காணாமற்போனவர்களாகப் பட்டியலிடப்பட்டவர்களினதும், தகவல் அனுப்பாதவர்களின் பேரில் கிரமமாக வந்த சம்பளங்களும் பற்றிய உண்மைநிலை மெதுவாக வெளிக் கசியத் தொடங்கியபோதே - சிங்கள மக்கள், தமிழர்களின் போராட்டத்தின்பாலான நியாயத்தை சற்றேனும் உணரத் தலைப்படவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

இதன் தொடராக - சமாதானத்திற்காக விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்தபோது, போரைத் தீவிரப்படுத்திய அரசாங்கத்தை தூக்கியெறியவே சிங்கள மக்கள் முடிவு செய்தனர்.

போரின் வெம்மை - தமது வீடுகளின் வாசலுக்கு வந்துவிட்டதென்பதைச் சிங்கள மக்கள் உணரத் தலைப்பட்டதனால்தான் - அமைதியின் தேவை அவர்களுக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் - விடுதலைப்புலிகள் தொடர்ந்து காட்டிவரும் நல்லெண்ண நடவடிக்கைகள், இரு இனங்களுக்குமிடையே நல்லுறவை வளர்க்கப் பயன்பட்டிருப்பதோடு- இலங்கைத் தீவில் இரு இனங்களும் கௌரவமாக, தத்தமக்குரிய ஆட்சியதிகாரங்களுடன், அமைதியுடன், நட்பார்ந்த சூழலில் வாழமுடியும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றன.

இந்தவகையில் - தெற்கின் பேரழிவால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காக, விடுதலைப் புலிகள் உதவிகளும்- இரு இனங்களுக்குமிடையிலான நல்லுறவுக்கு அர்த்தம் தந்திருப்பதோடு, மனிதநேயம்மிக்க செய்திகளையும் சிங்கள மக்களுக்கு எடுத்துச்சென்றிருக்கின்றன என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.

# மோதல்கள் இடம்பெறும் நாடுகளின் சமாதான முயற்சிகளுக்கு இலங்கை முன்னுதாரணமாகத் திகழ்கின்றது!

## புதிதாக பொறுப்பேற்கவுள்ள அமெரிக்கத் தூதுவர் கருத்து

மோதல்கள் இடம்பெறும் நாடுகளின் சமாதான முயற்சிகளுக்கு இலங்கை முன்னுதாரணமாக இருப்பதாக இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படுவதற்குப் பிரேரிக்கப்பட்டிருக்கும் ஜெவ்ரி லான்டிவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இலங்கையில் கடந்த 18 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் நம்பிக்கை தருவதாக அமைநதுள்ளது. இந்தச் சமாதான முயற்சிகள் எதிர்பார்க்கப்பட்டதையும்விட அதிக முன்னேற்றகரமானதாக அமைந்துள்ளது.

இந்த முன்னேற்றங்களை வைத்துப் பார்க்கும்போது விரைவிலேயே இலங்கை இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்குவது போன்றே, இலங்கையில் அமைதி ஏற்படுவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றத் தாம் தயாராக இருப்பதாகவும் ஜெவ்றி லான்டிவ் மேலும் தெரிவித்தார்.

# புலிகள் பேச்சுக்களுக்கு வரும் நிலையை அரசாங்கம் ஏற்படுத்த முன்வரவேண்டும்!

## வவுனியா வெகுஜன அமைப்புக்கள் பிரதமருக்கு கடிதம்

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதைப் புறக்கணித்து வருகின்ற நிலையை மேலும் தொடராதிருக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று -

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இந்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் கடந்த காலங்களில் ஆட்சிலிருந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை கட்டங்கட்டமாக, சுழற்சி முறையில் ஏமாற்றி வந்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும். அது மட்டுமன்றி, போரா? சமாதானமா? ஈழமா? சிறைக்கூடமா? என்ற கேள்விகளுடன் வட்டமேசை மாநாடு, திம்புப் பேச்சுவார்த்தை என்றெல்லாம் மக்களைத் திணறடிப்புச் செய்தார்கள்.

இவைகளெல்லாம், காலங்களைக் கடத்தி, ஏமாற்றி தமிழ் மக்களின் உடமைகளையும், உயிர்களையும் அழித்ததோடு, உரிமைகளும் மறுக்கப்பட்டு வந்ததன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுக்கும் நிலை உருவானது.

இதனால், தமிழ்மக்கள் ஆயுதங்களுடன் வெற்றிகளைச் சந்தித்தார்கள். இறுதியில் யுத்தத்தினால் சமாதானத்தை அடையமுடியாது என்று புரிந்துணரபட்டதன் காரணமாக, இன்றைய அரசு சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் ஊடாக, நிரந்தர சமாதானத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளும் இப்பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தில் நம்பிக்கை வைத்து, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு பேச்சுவார்த்தை மேடைக்கு வந்துள்ளனர். அவ்வகையில், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள இவ்வேளையிலும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அம்சமும் அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக மீள்குடியேற்றம், பொது மற்றும் தனியார் கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து படையினர் வெளியேறாமை, போக்குவரத்திற்கான பாதைத் திறப்பு போன்ற பல முக்கிய விடயங்கள் செயற்படுத்தப்படாமலே காலங்கடத்தப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, வெளிநாட்டுப் பேச்சுவார்த்தைகளின்போது இணங்கிக்கொண்டதற்கு அமைவாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கான புனரமைப்பிற்கான நிதி சிறான் அமைப்பின் ஊடாகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், இவையாவும் அரசினால் மறுக்கப்பட்டதுடன், தமிழ்மக்களின் புனர்வாழ்வுக்கென வெளிநாடுகளிலிருந்து அரசுக்குக் கிடைக்கப்பெற்ற பெருந்தொகை நிதிக்கு என்ன நடந்தது என்பது பெரும் புதிராகவே உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளின் பின்னர்தான் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலை மேலும் தொடராமல் இருப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என வற்புறுத்துவதோடு, விடுதலைப் புலிகளின் இச்செயற்பாட்டிற்குத் தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் வரவேற்பதுடன், அரசோ அல்லது வேறு எந்த சமூகமோ தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பதை தவிர்த்து, முழு சமூகத்தாலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிரந்தரத் தீர்வுடனான சமாதானத்தை இந்நாட்டில் நிலைநிறுத்தவேண்டும் என்பதற்காகவும், மேலும் உயிர், உடமை அழிவை தவிர்க்குமுகமாகவும் இப்பிரச்சனையுடன் தொடர்புடைய அரசும், சர்வதேச சமூகமும் இனங்களின் நலன்களில் அக்கறைகொண்டு, இதய சுத்தியுடன் - புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப்பிரச்சனைக்கு முடிவுகட்டத் தங்களினாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருக்கிறது.

# குடாநாட்டு பொலிஸ் நிலையங்களுக்கு 24 தமிழ் பொலிஸார் வருகின்றனர்!

யாழ்ப்பாண மாவட்டப் பொலிஸ் நிலையங்களில் கடமை புரிவதற்கெனப் புதிதாக 24 தமிழ்ப்பொலிஸார் இவ்வார இறுதிக்குள் இங்கு வரவிருப்பதாக, நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ்நிலையத்தில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹரல் அன்ரனி தெரிவித்தார்.

சகல தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழிலே முறைப்பாடு பதியப்படல் வேண்டும் என்ற கட்டாயச் சட்டம் அமுலில் வந்ததை அடுத்து, தென்பகுதிப் பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்துவரும் தமிழ்ப் பொலிஸாரே இங்கு கடமைக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் முதல் சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, முறைப்பாடுகள் யாவும் தமிழிலேயே பதிவு செய்யப்படுகின்றன என்றும் -

சகல பொதுமக்களும் அச்சமின்றி பொலிஸாருடன் நல்லுறவைப் பேணுவதற்குத் தடையாக இருக்கும் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டே தமிழ்ப் பொலிஸார் கடமைக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வல்வெட்டித்துறையில் மீண்டும் பிரதேச செயலக உப அலுவலகத்தை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குக!

## அரச அதிபரிடம் கோரிக்கை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் இயங்கிவந்த பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தை மீண்டும் இயங்கச் செய்யுமாறு வல்வெட்டித்துறை மக்கள் - யாழ். அரசாங்க அதிபரிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் இயங்கிவந்த உப அலுவலகம் நாளடைவில் மூடப்பட்டது. அதன்பின், வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பொலிகண்டி மக்கள் - பருத்தித்துறை செயலகத்திற்கு வந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இப்பகுதி மக்கள் போக்குவரத்துக் கஷ்டத்துடன், தொழில்களையும்விட்டு பருத்தித்துறைக்கு அலைய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாரத்தில் ஒரு நாள் உப அலுவலகம் செயற்பட்டால் தமது தேவைகளைப் அங்கு பூர்த்தி செய்யமுடியுமெனவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதனால் - வல்வெட்டித்துறையில், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தை திறப்பதற்கு ஆவன செய்து தருமாறு யாழ். அரசாங்க அதிபரை வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பொலிகண்டி மக்கள் கேட்டுள்ளனர்.

# திரைப்படத் தயாரிப்பாளர்களது கடனை அடைக்க லண்டன் வாழ் தமிழர்கள்தான் அகப்பட்டார்களா?

"தாய் கிண்ணிப் பிச்சை எடுக்க, மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானாம்".

தாயக மண்ணில் எங்களது சொந்தங்களும், பந்தங்களும் ஒருநேரச் சோற்றுக்கு அல்லாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பொழுதுபோக்கு என்ற போர்வையில் "நட்சத்திர இரவு" நடத்தி நிதிதிரட்டப் போகிறார்களாம். இது மன்னிக்கமுடியாத குற்றம். மற்றவர்களை மடையர்கள் ஆக்கும் முயற்சி.



பஞ்சணையில் படுத்து, பால், பழம் சாப்பிட்டு, பன்னீரில் கொப்பளித்து, ஆடம்பரமாக வாழும் தமிழர்கள் - ஏழை எளியதுகள் எக்கேடுகெட்டாலும் பரவாயில்லை, தாங்கள் மட்டும் வாழ்ந்தால்போதும் என்று நெஞ்சில் கொஞ்சமும் ஈரமில்லாத கல்நெஞ்சர்களே இந்த நட்சத்திர இரவுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இந்த நட்சத்திர இரவு யார் நடத்துகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, யாருக்காக நடத்தப்படுகிறது என்பதை அறியும்போதுதான் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தர்களை நினைத்து விட்டால்" என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி நொந்து பாடிய பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

தமிழீழத்தை ஒரு கணம் மறந்துவிடுவோம். தாய், தந்தையர்களை இழந்து பரிதவிக்கும் ஆயிரக்கணக்கான அநாதைக் குழந்தைகளை மறந்துவிடுவோம்.

போரினால், கைப்பிடித்த துணைவனை இழந்து, பொட்டிழந்து, பூவிழந்து வாழும் 21 ஆயிரம் விதவைப் பெண்களை மறந்துவிடுவோம். அவர்கள் கண்ணீரில் மிதப்பதை மறந்துவிடுவோம்.

போரினால் இடம்பெயர்ந்தோர், அகதிமுகாம்களில் அடைக்கலம் புகுந்தோர் இலட்சக் கணக்கில் தங்கள் காணி, பூமி, வீடு வாசல்களில் மீள்குடியமர முடியாமல் நடுத்தெருவில் நிற்பதை ஒரு கணம் மறந்துவிடுவோம்.

எமது மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடலையே நம்பி வாழ்பவர்கள்.

போர்க் காலத்தில் மீன்பிடிப்பதற்குச் சிங்கள இராணுவம் விதித்த கட்டுப்பாடுகள் இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. தொழிலுக்குப் போகும்போது இராணுவம் கொடுக்கும் அனுமதிப்பத்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போகும் நடைமுறை இப்போதும் தொடர்கிறது.

இவை போகட்டும். தமிழ்நாட்டில் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கும் ஏழை, எளிய மக்களின் துயர்துடைக்க இந்த நட்சத்திர இரவு நடத்தினால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

காவிரி நதிநீரைக் கன்னடம் திறந்துவிட மறுத்ததால், தஞ்சை விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிறார்கள். கஞ்சித் தொட்டிகளில் வார்க்கும் கஞ்சியைக் குடித்து உயிர் - உடலைவிட்டுப்போகாது காத்துக் கொள்கிறார்கள். உணவு கிடைக்காததால் எலிகளைப் பிடித்துக் கறியாக்கி உண்ணுகிறார்கள்.

பஞ்சத்தில் வாழும் தஞ்சை விவசாயிகள் கண்ணீரைத் துடைக்க இந்த நட்சத்திர இரவு நடைபெற்றால் அதனை நிச்சயம் வரவேற்கலாம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனச் சாத்தனார் பாணியில் பாராட்டி இருக்கலாம்.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையென்றால் - ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று அறம் பாடிய பாரதிக்காக அதனை வரவேற்றிருக்கலாம்.



பின் எதற்காக இந்த நட்சத்திர இரவு? எவருக்காக இந்த நட்சத்திர விழா?

தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப்பாளர்கள், கையைச் சுட்டுக்கொண்டு கடனாளியாகி விட்டார்களாம். அந்த "ஏழை"த் தயாரிப்பாளர்களது கடனை அடைக்கத்தான் இந்த நட்சத்திர இரவு நடத்தப்படுகின்றதாம்.

இதில் இருந்து தெரியும் உண்மை என்னவென்றால், இந்த நட்சத்திர இரவை நடாத்துபவர்களும், அதில் கலந்துகொள்ளும் தமிழ்த் திரைப்பட முன்னணி நடிகர்களும், நடிகைகளும் - தமிழீழத் தமிழர்களை இளிச்சவாயர்கள், ஏமாளிகள், கோமாளிகள் என நினைக்கிறார்கள் என்பதுதான்.

தமிழ்த் திரையுலகம் இன்று நலிந்து போய்க்கிடப்பது உண்மைதான். பெரிய பொருட்செலவில் முன்னணி நடிகர், நடிகைகளை வைத்து எடுக்கும் படங்கள் வசூலைப் பொறுத்தளவில் பலத்த அடிவாங்கியுள்ளன. திரையரங்குகளில் ஓகோ, ஓகோ என ஓடுவதற்குப் பதில், திரையரங்களை விட்டே ஓடுகின்றன.

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்தின் "பாபா" படம் பலத்த அடி வாங்கியது. கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து படவிநியோக உரிமையை வாங்கிக்கொண்ட விநியோகஸ்தர்கள் கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்துவிட்டார்கள். நல்ல காலமாக அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை படத் தயாரிப்பாளரான ரஜனிகாந் பெருந்தன்மையோடு ஈடுசெய்துவிட்டார்.

ஆனால், "ஆளவந்தான்" கதை அப்படியல்ல. பலத்த பொருட்செலவில் கமலஹாசனை வைத்து எடுத்த இந்தப் படம் - "பாபா" படத்தைவிட செம அடி வாங்கியது. நொந்து போன படவிநியோகஸ்தர்கள் ரஜனிகாந் முன்மாதிரியைப் பின்பற்றி கமலஹாசனும் தன் சம்பளத்தில் ஒரு பகுதியைப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பார் என எதிர் பார்த்தார்கள்.

கமலஹாசன் - ரஜனிகாந் அல்ல. "ஆளவநதான் ஓடாததற்கு நான் பொறுப்பில்லை" என கையை அவர் அகல விரித்துவிட்டார்.

இன்று தமிழ்த் திரையுலகு நொந்து போய்க் கிடக்கிறது. வெளிவரும் படங்களில் பெரும்பாலானவை தோல்வியைத் தழுவுகின்றன. மிகக் குறைந்த எண்ணிக்கையான படங்களே வெற்றிபெற்று, போட்ட முதலை மீட்க உதவுகின்றன.

இதற்கு என்ன காரணம். தமிழ்த் திரைப்பட முன்னணி நடிக, நடிகைகள் தங்கள் சம்பளத்தைக் கோடிக் கணக்கில் எக்கச்சக்கமாக ஏற்றிவிட்டதே அதற்குக் காரணமாகும்.

ரஜனிகாந் இப்போது வேறு தயாரிப்பாளர்களது படங்களில் நடிப்பதில்லை. அவரைவிட்டுவிடுவோம். கமலஹாசனும், விஜயகாந்தும் ஒரு படத்தில் நடிப்பதற்கு 5-6 கோடி ரூபாய வாங்குகிறார்கள். மற்றும் பிரபு, சத்தியராஜ், விஜய், விக்ரம், சரத்குமார், பிரசாந், அஜித், மாதவன் போன்றோர் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள். நேற்று முளைத்து இன்னும் இரண்டு இலைவிடாத சிலம்பரசன், தனது சம்பளம் 4 கோடி என்கிறார். நகைச்சுவை நடிகர் வடிவேலு ஒரு படத்துக்கு 50 லட்சம் வாங்குவதாகச் சொல்கிறார்கள்.



நடிகர்கள் போலவே சிம்ரன், சிநேகா, ஐஸ்வர்யா ராய், ஜோதிகா, மும்தாஜ், மீனா போன்ற முன்னணி நடிகைகள் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள்.

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களது கடனை அடைக்கவேண்டும் என்றால், இந்த நடிகர், நடிகைகள் ஆளுக்கு ஆள் "மொய்" எழுதினாலேபோதும். எல்லாக் கடன்களையும் வட்டியோடு அடைத்துவிடலாம்.

தமிழ்நாட்டுத் தமிழர்களில் பாதிப்பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அது அவர்களுடைய குற்றமல்ல. ஆனால், அவர்களது பாமரத்தன்மை கோடம்பாக்கத்துக் கனவுத் தொழிற்சாலை உற்பத்தி செய்து அனுப்பும் திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள், கதாநாயகிகள் நிஜவாழ்க்கையிலும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள்.

பூந்தோட்டத்தில் கதாநாயகனும், கதாநாயகியும் ஆடிப்பாடி, ஓடிப்பிடித்து விளையாடுகிறார்கள். அதைப் பார்க்கின்ற பாமரர்கள் அதை நிஜமென்று நம்புகிறார்கள்.

கதாநாயகன் தன்னந்தனியாக 10 - 15 ரவுடிகளோடு மோதி, அடித்து அவர்களை நொருக்குகிறான். அதைப் பார்க்கிற இராமசாமியும், முனியம்மாவும் அதை உண்மையென்று நம்புகிறார்கள்.

## கனடாவிலிருந்து நக்கீரன்

சாப்பிட வழியில்லாவிட்டாலும், படங்கள் வெளியான அதேநாளில் படத்தைப் பார்த்துவிட தமிழகக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை 'Cut' பண்ணுகிறார்கள்.

ஒரு காலத்தில் வேலைக்காரி, பராசக்தி, இரத்தக் கண்ணீர், காதல் பரிசு, 16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், வேதம் புதிது, முந்தானை முடிச்சு, நம்ம ஆளு போன்ற சமூகப் பார்வை நிறைந்த படங்கள் வெளிவந்து வெற்றிநடைபோட்டன.

இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நூறு படங்கள் வந்தால் பத்துத்தான் தேறுகிறது, மற்றவை எல்லாம் தோல்வியடைந்து விடுகிறது.

சினிமா மோகம் தமிழ்நாட்டைச் சீரழித்து வருகிறது. சினிமா ஒரு வலுவான ஊடகம். ஆனால், கறிக்கு உப்புப்போல அது அளவோடு இருக்கவேண்டும்.

இன்று வெளிவருகிற படங்களில் கதைகளைக் காணோம். முதலில் படத்துக்குப் பூசைபோட்டுவிட்டுப் பின்னர் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் முகாம் போட்டுக் கதையைத் தேடுகிறார்கள்.

குளியலறைக் காட்சி, கனவுக்காட்சி, கதாநாயகியின் பொக்கிளில் கதாநாயகன் பம்பரம் விடும் காட்சி, அரைகுறை உடையில் நடனக் காட்சி, அடிதடிச் சண்டைக் காட்சி வில்லன் கதாநாயகனின் தங்கையைக் கற்பழிக்கும் காட்சி, இரட்டை அர்த்தம் நிறைந்த தமிங்கிலப் பாடல்கள், வசனங்கள். இந்தச் "சூத்திரத்துக்கு" இணங்கவே தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(தொடரும்)

## யாழ். நகரில் சுகாதார சீர்கேட்டைக் குறைப்பதற்காக மக்களின் ஒத்துழைப்பை ஆணையாளர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ் - மாநகரசபை எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் சுகாதார சீர்கேட்டை ஒழிப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப் புத்தேவை என யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ. இராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் - மாநகரசபை எல்லைக்குள் சேரும் கழிவுகளை - சபை வாகனங்கள் மூலம் காக்கைதீவிலுள்ள சபைக்குச் சொந்தமான காணிக்குள் கொட்டுவது வழக்கம்.

இவ்விடத்தில் பழுதடைந்த கடலுணவுகள், களவாக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகள், கோழிப் பண்ணைகளில் சுத்தம் செய்யப்படும் கோழியிறைச்சிக் கழிவுகள், கண்ணாடி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுக் கண்ணாடிகள், யாழ்.போதனா வைத்தியசாலைக் கழிவுகள், நல்லூர் பிரதேச சபையின் கொல்களக் கழிவுகள், உணவு விடுதிகள் மற்றும் தேநீர்ச்சாலைக் கழிவுகள் போன்றன சட்ட விரோதமாகப், பொறுப்பற்றவர்களால் தினமும் கொட்டப்பட்டு வருகின்றது. இதனால், காக்கைதீவுப் பகுதி மட்டுமல்லாமல் அவ்விடத்தைச் சூழவுள்ள பிரதேசமும், அயலிலுள்ள மக்கள் குடியிருப்புக்களும் பாரிய சுகாதார அச்சுறுத்தலை எதிர்நோக்கிய வண்ணமுள்ளன.

மேற்குறித்த சீர்கேடுகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாகக் காக்கைதீவிலுள்ள குப்பை கொட்டும் இடத்தில் குழிகளை வெட்டி, அதிலிருந்து பெறப்படும் மணலை தினமும் அங்கு கொட்டப்படும் கழிவுகளுக்குமேல் போட்டுப் பரவுவதுடன், அக்குழிகளினுள் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் கழிவுகளைப் போட்டு மூடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரத்திற்குத் தீங்கும், துர்நாற்றமும் ஏற்படுத்தக்கூடிய கழிவுகளைச் சபை வாகனங்கள் மூலம் அகற்றி, அவற்றை மேற்படி குழிகளுக்குள் போட்டு மூடுவதற்குக் கழிவகற்றல் கட்டணமாகச் சிறுதொகைப் பணத்தினைச் செலுத்தினால் சபைத் தொழிலாளர்களே அவற்றை திருப்பதிகரமாக அப்புறப்படுத்த உதவுவார்கள். இதனால், மேற்குறித்த கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கு விரும்புவோர் மாநகரசபையின் பொது சுகாதார பொறியியற் பிரிவுடன் தொடர்பு கொண்டு, ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் மேற்குறிப்பிட்ட சுகாதார சீர்கேடுகளை ஒழிப்பதில் எம்முடன் ஒத்துழைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கி கடன்வசதி

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியாண்மை விருத்திப் பயிற்சி நெறியை மேற்கொண்டவர்களிற்கு மக்கள் வங்கி 50 ஆயிரம் ரூபா கடன் வசதியை வழங்க முன்வந்துள்ளது. இதன்படி சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் - தொழில் துறைத் திணைக்களத்திடமோ அல்லது கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடனோ தொடர்பு கொள்ளும்படி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பிறப்பு, இறப்பு சான்றிதழ் விண்ணப்பம் எவருக்கும் முன்னுரிமை வேண்டாம்!

### பதிவாளருக்கு அரச அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)


பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டாமென மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு யாழ்.அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பிறப்பு, இறப்பு அத்தாட்சி அலுவலகத்துக்கு அரசாங்க அதிபரின் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு இறப்பு அத்தாட்சி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாகத் எனது கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டுள்ளது, அத்துடன் செயலகத்தில் கடமையாற்றும் பலர் முன்னுரிமை அடிப்படையில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதாகத் தகவல்கிடைத்துள்ளது.

இதனால், சாதாரண மக்கள் உரிய காலத்தில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும், அதன் பிரதிகளையும் பெறுவதற்குத் தடை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் எந்தவிதமான முன்னுரிமை விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டாமெனக் கேட்டுக் கொள்வதாக அரச அதிபர் அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ரா,சு)



'சார்ஸ்' குறித்த எச்சரிக்கையை வெளிப்படுத்தும், அபாய எச்சரிக்கைக் குறி பொருத்தப்பட்ட முகமூடியுடன் சீனப் பெண்.

# அதியுச்ச உஷார் நிலை; அமெரிக்கா பிரகடனம்!

## 48 மணிநேரத்தில் தாக்குதல் என மர்மத் தகவல்



(வொஷிங்ரன்)

அமெரிக்கா முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் உஷார்நிலை, 'செம்மஞ்சள' நிறத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது, அதியுச்ச பாதுகாப்பு நிலைவரததின் இரண்டாவது நிலையாகும்.

பொதுமக்கள் பதற்றமடையாது, வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால், விழிப்பாக இருப்பது நல்லது என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க் நிலத்தடிப்பாதைகள், சிக்காக்கோ சியர்ஸ் ரவர், சன்பிரான்சிஸ்கோ கோல்டன் கேட் பாலம என்பவற்றில், அமெரிக்க தேசியக் காவற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதல் - சிறுரக ஆயுதங்கள் மூலமோ, பாரிய குண்டுகள் மூலமோ தற்கொலைத் தாக்குதல் மூலமோ எந்த வடிவிலும் வரலாம் என அமெரிக்கப் புலனாய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

"அடுத்த 48 மணிநேரத்தில், கொடூரத் தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளது. முக்கிய நகரிலுள்ள முஸ்லிம்கள் உடனடியாக வெளியேறிவிடவேண்டும். முக்கியமாக, பொஸ்டன் மற்றும் நியூயோர்க் நகரிலிருந்து முஸ்லிம்கள் பாதுகாப்புக் கருதி வெளியேற வேண்டும்" என, அநாமதேய 'ஈ-மெயில்' தகவல் ஒன்று ஏ.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. மற்றுமோர் அநாமதேயத் தகவல் - "வொஷிங்ரன், நியூயோர்க் மற்றும் முக்கிய கடற்கரைகளில் தங்கியிருப்பதை முஸ்லிம்கள் கைவிட வேண்டும். இப்பகுதிகளில் தாக்குதல் நடக்கவுள்ளது" என எச்சரித்துள்ளது.

அல்-கொய்டாவின் அச்சுறுத்தலாக இது இருக்கலாம் என, தகவல்களை ஆராய்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகவலம்

# கறுப்பினக் குடும்பம் ஒன்றின் பணியாளராக வெள்ளையர்!

முன்னாள் வெள்ளை நிற இன வெறி ஆட்சி நிலவிய தென்னாபிரிக்காவில், வெள்ளையின இளைஞர் ஒருவர், ஆறு வருடங்களாக கறுப்பினக் குடும்பத்திற்கு பணியாளராகச் செயற்பட்ட தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

18 வயதான இந்த இளைஞரின் பெற்றோர், 'ஆபிரிக்கன்ஸ்' மொழியைப் பேசுபவர்கள். ஆனால், இந்த இளைஞருக்கு அவரை அடிமையாக வைத்திருந்த கறுப்பின மக்களின் 'டெபிள்' மொழியே தெரிந்துள்ளது என, பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த இளைஞர், ஆறு வயதில் கறுப்பினக் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணியாளராக வழங்கப்பட்டாராம். இவ்விவகாரத்தை, நாம் ஆட்கடத்தல் சம்பவமாகவே நோக்குகின்றோம் என, தென்னாபிரிக்கப் பொலிஸார் தெரிவித்தனர்.

1985 மே 4 ஆம் திகதி பிறந்த இந்த இளைஞர், தனது பெற்றோருடன் ஜொகனஸ் பேர்க்கில் வசித்துள்ளார். இவர், தனது பெற்றோரின் திருமண அல்பத்தில் உள்ள படங்களை, இப்போதும் நினைவு கூரக் கூடிய நிலையில் உள்ளார்.

அவரின் தகவலின்படி, தாம் முதலில் வடகிழக்கு நகரான வெரீனாவில், கறுப்பினக் குடும்பத்துடன் வாழ்ந்ததாகவும், பின்னர் இத்தம்பதியினர் பிரிந்துவிட்டதாகவும் தெரிவிக்கிறார். தொடர்ந்து - தாம் ஒரு பெண்ணுடன், அவரது குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்ததாகவும், அங்குள்ள படசாலைக்குச் சென்றபோது, தாம் வெள்ளையினத்தவன் என்பதால், ஏனைய கறுப்பினச் சிறுவர்களால் கேலி செய்யப்பட்டதாகவும் கூறுகின்றார். வீட்டில் தொலைக்காட்சி பார்க்கவிடாமல் தாம் தடுக்கப்பட்டதாகவும், ஐந்தாம் வகுப்புடன் கல்வியை நிறுத்தி, பண்ணைப் பராமரிப்புத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கும், தான் அச்சுறுத்தப்பட்டதால், மற்றுமோர் பண்ணையில் பணிபுரிந்ததாகக்கூறும் இவர், அங்கும் அச்சுறுத்தல் அதிகரிக்கவே பொலிஸில் சரணடைந்ததாகக் கூறுகிறார்.

# சீன வெள்ளப் பெருக்கு; 'சார்ஸை'யும் பெருக்கும்!

## உலக சுகாதார ஸ்தாபனம் கவலை



சீனாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு - 'சார்ஸ்' நோயை மேலும் பெருக்கமடையச்செய்யலாம் என, உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. நீரினால் 'சார்ஸ்' வைரஸ் பரவாது என்றாலும், மனிதக் கழிவுகளில் இவை சிலகாலம் தங்கிவாழக் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே - பெருகிஓடும் கழிவு வாய்க்கால்கள் மூலம் 'சார்ஸ்' பரவலாம் எனக் கூறப்படுகின்றது.

'சார்ஸ்' வைரஸினால், உலகம் முழுவதும் 662 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில், 294 பேர் சீனாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'அசே' மாகாணத்தில் தொடர்ந்து மோதல்!



இந்தோனேஷிய 'அசே' மாகாணத்தில் கடும்போர் நடைபெற்று வருகிறது. நேற்றைய தினம், நடைபெற்ற மோதல், கடந்த மூன்று நாட்களாக நடைபெறும் மோதல்களில் மிக மோசமானதாக இருந்தது எனக் கூறப்படுகிறது.

நேற்றைய போரில், 10 பொதுமக்கள் உட்பட 13 பேர் பலியானதாக, 'அசே' போராளிகள் தெரிவித்தனர். சமாதானப் பேச்சுக்களின் முறிவையடுத்து, 26 வருடகாலப் போர், மீண்டும் உச்சநிலையை அடைந்துள்ளது.

இதேவேளை - போரின் மத்தியில், 'அசே' மாகாணத்தில் 150 பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதனால், ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. 'அசே' மாகாணம், எண்ணெய் வளம்மிக்க பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சதாமின் ஆதரவாளரான பாடகர் சுட்டுக் கொலை!




பக்தாத்தில் அமெரிக்கப் படை.

சதாம் ஹுசைனுக்கு ஆதரவாகப் பாடல்களைப் பாடிவந்த ஈராக்கியப் பாடகர் ஒருவர், சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஈராக்கியத் தொலைக்காட்சியில், அடிக்கடி தோன்றும் குவாய்சி எனும் இப்பாடகர், பாத் கட்சி உறுப்பினருமாவார். பக்தாத்தில் இவரது வீட்டுக்கு அருகே வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமெரிக்க விமானங்கள், ஆரம்ப கட்டத்தில் பக்தாத்தை தாக்கியபோதெல்லாம், ஈராக்கியர்களை உற்சாகப்படுத்தும் வகையிலான பாடல்களை ஈராக்கியத் தொலைக்காட்சியில் இவர் பாடிவந்தார்.

சதாம் ஆட்சியுடன், இவருக்கு இருந்த நெருங்கிய தொடர்பே கொலைக்குக்காரணம் என, இப்பாடகரின் மகன் கூறியுள்ளார். சதாமின் ஆதரவாளர்களில் எனது தந்தையும் ஒருவர். அவர் சதாமை முழுமையாக ஆதரித்தவராவார். இக்கொலை, பக்தாத்தின் பாதுகாப்பின்மையை காட்டுகின்றது என, இப்பாடகரின் மகன் தெரிவித்தார். இக்கொலையை அடுத்து, தனது தந்தையின் மரணச்சடங்கில் கலந்துகொள்ளக்கூட உறவினர்கள் அஞ்சியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புகைத்தல் தடை



புகைத்தலுக்கு எதிரான பிரகடனம் ஒன்றை, ஒப்பந்தமாக - உலக சுகாதார ஸ்தாபனம் ஏகமனதாக கொண்டுவந்துள்ளது. இதன்படி, அடுத்த ஐந்து ஆண்டுகளுள், ஐ.நாவிலுள்ள அனைத்து 192 உறுப்பினர் நாடுகளும் புகையிலை தொடர்பான விளம்பரங்களை கடுமையாகக் குறைக்கவுள்ளன.

இப்புதிய திட்டத்தின்படி சிகரெட் பெட்டியின், மூன்றில் ஒரு பகுதியை அடக்கக்கூடிய வகையில், புகைத்தல் தடை என்னும் விளம்பரத்தை பாதிக்கப்பட்ட நுரையீரல் படத்துடன் சிகரெட் நிறுவனங்கள் வெளியிட வேண்டும்.

# அமெரிக்கப்படை தாக்கியதில் 4 ஆப்கான் படையினர் பலி



ஆப்கானிஸ்தானில், அமெரிக்கப்படைகள் நடத்திய தவறுதலான தாக்குதல் என்று கூறப்படும் ஒரு சம்பவத்தில், நான்கு ஆப்கானிஸ்தான் அரசபடையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

காபூல் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக, இச்சம்பவம் நடைபெற்றது.

தூதரக காவலர்களுக்கும், ஆப்கான் படையினருக்கும் இடையே நடந்த மோதலிலேயே, இவர்கள் பலியானதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். தூதரகம் முன்பாக உள்ள படைமுகாமில் இருந்த ஆப்கான் படையினர், வீதியில் சென்ற கார் ஒன்றை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியபோதே, மோதல் வெடித்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும் - ஆப்கான் படையினர், அருகிலுள்ள களஞ்சியம் ஒன்றிற்கு ஆயுதங்களை எடுத்துச்சென்றதை அவதானித்தபின்பே, அமெரிக்கப் படைகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக, ஆப்கான் உள்துறை அமைச்சகப் பேச்சாளர் தெரிவித்தார். இதுகுறித்து அமெரிக்கத் தரப்பில் எதுவும் கூறப்படவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உள்ளுராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது

## சபையில் அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிற்கான உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் - ஒத்திவைக்கப்படமாட்டாது என்று நீதியமைச்சர் லொக்குபண்டார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக, புதிய சட்டமூலம் ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன - வடகிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு உடனடியாகத் திகதி நிர்ணயிக்க வேண்டும் எனவும்,

இவ்வாறான சட்டத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் தேவைகளுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும் அப்போது குற்றஞ்சாட்டினார். (01)

## மிதிவெடியில் சிக்கி இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

தனது வீட்டைப் பார்க்கச் சென்ற இளைஞன் ஒருவர், மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இயக்கச்சி, பனிச்செடி என்னும் இடத்தில் நடந்த இச்சம்பவத்தில் சிதம்பரநாதன் பிரதீபன் (வயது 22) என்னும் இளைஞனே வலது காலில் படுகாயமடைந்தார்.

நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட வீட்டினைச் சென்று பார்வையிட்டபோதே, மேற்படி இளைஞன் மிதிவெடியில் அகப்பட்டார். (ரா)

# ரெலோ செயலாளர் பிரசன்னா மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல்

## மட்டக்களப்பு புளியந்தீவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- புளியந்தீவுப் பகுதியில் நேற்று முன்னிரவு நடைபெற்ற துப்பாக்கிச்சூடு மற்றும் கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களில், ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்னிரவு 6.50 மணியளவில், புளியந்தீவில் உள்ள ரெலோ இயக்க பொதுச் செயலாளரான இந்திரகுமார் பிரசன்னாவின் வர்த்தக நிலையம் மீது, முதலாவது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் நடந்தபோது பிரசன்னா அங்கிருந்தபோதும் - இத்தாக்குதலில் வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்காததால் அவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

பின்னர் - புளியந்தீவுப் பகுதியில், அதிகார் வீதியில் இரவு 8.10 மணியளவில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. இச்சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்தவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன்பின்னர் - அப்பகுதியிலுள்ள அந்தோனியார் வீதியில், இரவு 8.15 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இச்சம்பவத்தில் இராணுவ உளவுப்பிரிவில் பணியாற்றிய ஒருவர் மரணமடைந்தார். இவர், முன்னர் புளொட் அமைப்பிலும் உறுப்பினராக இருந்த 'மாஸ்ரர்' என்பவரே என அடையாளம் காணப்பட்டார். இச்சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர். (01,200)

### இடைக்கால...

டுமென, விடுதலைப் புலிகளின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் இந்த விடயம் தொடர்பாக அளிக்கும் பதிலில்தான்- பேச்சுக்களில் இணைவதா?, உதவி மாநாட்டில் கலந்துகொள்வதா? என்பதைத் தீர்மானிக்கப்போவதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தர்மபுரம்...

நடைபெற்ற மேற்படி விபத்தில், மயில்வாகனபுரம் விசுவமடுவைச் சேர்ந்த சிவகுகதாஸ் (வயது 19) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார். இதேயிடத்தைச் சேர்ந்த த.தயாபரன் (வயது 16) என்ற இளைஞன் காயமடைந்துள்ளார். (02)

### அரசாங்கத்தின்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது பிரதமருடன் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் உடனிருந்தார்.

மேற்படி சந்திப்பைத் தொடர்ந்து நோர்வேத் தூதுவர் மற்றும், ஜப்பானியத் தூதுவர் ஆகியோரையும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர். இச்சந்திப்புக்களின் போதும், மேற்படி புதிய அதிகாரக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியம் குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்து விளக்கினர்.

### ஓடும் ....

மேற்படி இளைஞனை இனங்கண்டு, நடவடிக்கை எடுக்க உதவுவதாக மினிபஸ் சாரதி உறுதியளித்ததைத் தொடர்ந்தே, ஒரு மணிநேரத்தின் பின்னர்- பஸ், பொதுமக்களால் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டது. (128)

# இடைக்கால நிர்வாக கட்டமைப்புக் குறித்து...

விடுதலைப் புலிகளின் தலைமை எடுத்த முடிவின் பிரகாரம், வட-கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை பொறுப்பேற்பதற்காக, தேவைகளை அதிகளவில் கொண்ட இடைக்கால நிர்வாகத்தினை உருவாக்கும், எமது தலைவர் பிரபாகரனின் கோரிக்கை தொடர்பாக, தாங்கள் சமர்ப்பித்த யோசனைகளுக்கு நான் பதிலளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளேன்.

நீங்கள் சமர்ப்பித்த யோசனைகள் மூன்று ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன. ஒன்று, விடுதலைப் புலிகளும் அரசும் செய்து கொண்ட உடன்படிக்கை, மற்றையது வட-கிழக்கு அபிவிருத்தியையும், புனரமைப்பையும் வலிமைப்படுத்தி வியாபிப்பதற்கான அம்சங்களையுடைய அறிமுகப் பத்திரம்.

மூன்றாவது - அபிவிருத்தி நடவடிக்கைகளை, மக்களால் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி அமைப்புக்கள் மூலம் முன்னெடுப்பது தொடர்பான கடிதம் என்பனவாகும். உங்களின் இந்த யோசனைகளையிட்டு நாங்கள் கவனத்திற்கு எடுத்தோம். இவற்றுக்கான எமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கு முன்னர், [illegible] இணக்கம் கண்டனர்.

இரண்டாம் கட்டம் சமாதானப் பேச்சில் சம்பந்தப்பட்ட இருதரப்புக்களும் இந்தச் செயலணிக் குழுவை - உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளுக்கான உபகுழுவாக மாற்றுவதற்கு இணக்கம் கண்டனர்.

வட-கிழக்கின் மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளை இனங்காண்பது இந்த உப குழுவின் செயற்பாடாக இருந்தது. இடம் பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றும் திட்டங்கள், வீதிப் புனரமைப்பு, உட்கட்டுமான உருவாக்கம், சுகாதார வசதிகள், பாடசாலைகள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் இக்குழுவின் பணிகளாக இருந்தன.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கைநிலை வழமைக்குத் திரும்பவும், இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் திரும்பவும் வசதிகள் செய்வது என்பவையும் முக்கிய நோக்கங்களாக இருந்தன என்பதனை தாங்கள் அறிவீர்கள். இந்த மனிதாபிமான உதவிகளை சிறான் பொறுப்பேற்றது. துரதிர்ஷ்டவசமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள [illegible] யும் எனக் கருதுகிறது.

நிரந்தர அரசியல் தீர்வுக்கான உடனடிவாய்ப்புக்கள் எதுவும் தற்போதைக்கு எட்டப்படமுடியாத நிலையில் விடுதலைப்புலிகளின் பெரும் பங்களிப்புடனான ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளின் தலைமை பிரேரித்திருந்தது. இதன்மூலம், போரால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் பொருளாதாரத்தையும் சமூக நிலையையும் மீளக்கட்டியெழுப்ப முடியுமென புலிகளின் தலைமைப்பீடம் கருதுகிறது.

இந்தக் கட்டத்தில் 1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும், இந்திய அரசாங்கம் - இவ்வாறானதொரு இடைக்கால நிர்வாகப் பொறிமுறையை விடுதலைப்புலிகளின் மேலாதிக்கமான பங்களிப்புடன் ஏற்றுக்கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பில், இத்தகைய அதிகாரம் உடைய கட்டமைப்பினை உருவாக்கவேண்டும் என விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வலியுறுத்துகின்றது. [illegible] எதிர்பார்ப்பை பூர்த்திசெய்வதாக அமையவில்லை.

மற்றைய வரைபு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்கான, பலமானதும் விரிவானதுமான காரணிகளைக் கொண்ட பொறிமுறையாகும். இது, அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு கவுன்சிலுக்கான அதிகாரங்களை விட அதிக அதிகாரங்களை கொண்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வரைபின்படி, சிறானின் விரிவான பொறிமுறை மூன்றாம் கட்டமைப்புக்கு மாற்றப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. கொள்கை சபை, திட்டக்குழு, நிர்வாகக்கட்டமைப்பு என்ற மூன்று படி கட்டமைப்பு இங்குண்டு. இது, பிரதமர் அலுவலகத்தின் ஏகபோக அதிகாரத்தை நீக்குவதாக அமைகிறது. கொள்கை உருவாக்கல் குழுவில் விடுதலைப் புலிகள் சம பிரதிநிதித்துவத்தை அனுபவிப்பர் என வரைபு கூறுகிறது. ஆனால், வடக்கு-கிழக்கில் வதியும் தமிழரே நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிப்பர். இதன் கருத்து- புலிகளின் அரசியற் பிரதிநிதிகள் நிர்வாகக் கட்டமைப்பினுள் அங்கம் வகிக்க முடியாது என்பதாகும். சுருக்கமான இந்த [illegible] வுள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனால், இத்திட்டத்தில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட காரணிகளால் - அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை, புலிகளின் அதிகரித்த பங்களிப்புடன் வடக்கு- கிழக்கில் உருவாக்குவது அவசியம் என விடுதலைப் புலிகளின் தலைமை அறிவித்துள்ளது.

இறுதியாக, உங்கள் கடிதத்தில் உள்ளூரில் தெரிவான கட்டமைப்பை, (உள்ளூராட்சி சபை) வட-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்குப் பயன்படுத்துவது பற்றிக் கூறியுள்ளீர்கள். இச்சபைகளின் எதிர்காலம், அதிகாரங்கள் மிக மட்டுப்படுத்தப்பட்டன. இவற்றினால் இப்பணிகளை பயனுள்ள வகையில் மேற்கொள்ள இயலாது. இதற்கு மேலாக அரசியல் சுதந்திரத்திற்காகவும், சுதந்திர நாட்டிற்காகவும் சுதந்திரப் போர் நடத்திய நாம்- இறுதியில் அதிகாரம் ஏதுமற்ற கிராமியக்குழுக்களுடன் நின்றால் தமிழ் மக்களால் புறந்தள்ளப்பட்டு விடுவோம்.

தற்போதைய சமாதான முட்டுக்கட்டைகளை நீக்க நீங்கள் எடுக்கும் தளராத முயற்சிகளுக்கு எமது ஆத

நாங்கள் கவனத்திற்கு எடுத்தோம். இவற்றுக்கான எமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கு முன்னர், வட-கிழக்கு அபிவிருத்திக்கு வலுவான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என, இத்தருணத்தில் முன்வைக்க எமது தலைவர் ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதற்கான விளக்கத்தை இதனால் தர விரும்புகிறேன்

இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனையை எமது தலைவர் கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னரே தெரிவித்திருந்தார். இந்த யோசனையை ஐ.தே.க. தலைமைப் பீடம் அங்கீகரித்திருந்தது

பிரதமர் ரணில் விக்கிரசிங்கவும் தேர்தல் பிரசாரத்தில் இதற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார்.

இடைக்கால நிர்வாக விடயம் தாய்லாந்து சட்டாஹிப்பில் நடைபெற்ற முதலாவது கட்ட சமாதானப் பேச்சுக்களிலும் ஆராயப்பட்டது உங்களுக்குத் தெரியும். புலிகளின் இந்த யோசனை தொடர்பாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விளக்குகையில், அரசியல் யாப்புக்குப் புறம்பாக, இத்தகைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்குவது - சட்ட ரீதியாகவும், யாப்பு ரீதியாகவும் தடைகளைக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

பேச்சுக்களின் முதலாவது கட்டத்திலேயே, அரசியல் முரண்பாடுகளை தீர்க்கும் முகமாக இருதரப்பினரும் இத்திட்டத்திற்குப் பதிலாக- வட-கிழக்கிற்கான மனிதாபிமான மற்றும் புனரமைப்பிற்கான கூட்டுச் செயலணியை உருவாக்குவதற்கு பிமான உதவிகளை சிறான பொறுப்பேற்றது. துரதிர்ஷ்டவசமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறான் அமைப்பினால் முடியவில்லை. துன்பப்படும் மக்களின் நெருக்கடிகளைத் தீர்க்கக்கூடிய நிலையும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் ஆதரவும், நல்லெண்ணமும் இருந்தபோதும்- மக்களின் எதிர்பார்ப்புக்களை சிறானினால் நிறைவேற்ற முடியவில்லை. சிறான் மீது மக்கள் நம்பிக்கை இழந்தனர்.

இந்த விரக்தியான சூழ்நிலையிலேயே, உங்களது வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சனுடனான சந்திப்பின்போது - தலைவர் பிரபாகரன், வடக்கு-கிழக்குக்குப் பொருத்தமான, அதிகாரமுள்ள, சட்ட அங்கீகாரம் பெற்ற ஒரு புதிய கட்டமைப்பு ஒன்று - மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளத் தேவை என வலியுறுத்தினார்.

இந்தப் புதிய கட்டமைப்பானது- செயற்திறன்மிக்கதும், வெளிப்படைத்தன்மையானதும், நம்பகத்தன்மை கொண்டதும், உறுதியான செயற்பாடுகளையும் அதிகாரங்களையும், ஊழலற்றதுமான பொது நிர்வாக அதிகாரப் பணிக் குழுவின் தடைகளற்ற, தாமதங்களற்ற ஒரு கட்டமைப்பாக இருக்கவேண்டும் என்பது தலைவரது விருப்பமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் கருத்துப்படி, தமிழ்த் தேசியப் பிரச்சினை, தற்போதைய உறுதியற்ற அரசியல் நிலைமைக்கு அல்லாமல்- அரசியல் ரீதியான அதிகாரம் உள்ள கட்டமைப்பின் கீழேயே தீர்த்துவைக்கப்பட முடிகவேண்டும் என விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வலியுறுத்துகின்றது.

எமது பார்வையில், சிறானுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளது. அதனால், இத்தகைய பாரிய பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாது.

வன்னி தலைமையகத்துக்கும், லண்டனிலுள்ள எனக்கும்- நீங்கள் அனுப்பிவைத்த உங்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளையும் கருத்துக்களையும் இப்போது பரிசீலித்துப் பார்ப்போம்.

உங்களால் இலங்கை அரசுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட இரண்டு பக்க ஒப்பந்தவரைபு அது. 17 மே 2003 அன்று சனிக்கிழமை தமிழ்ச்செல்வனிடம் இது ஒப்படைக்கப்பட்டது. உங்களது வரைபில் கவுன்சில் என்ற அமைப்பு, சிறானின் விரிவான ஒரு கட்டமைப்பாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டமைப்பின் செயற்பாடுகளும் அதிகாரங்களும்- உங்கள் வரைபின்படி, ரோக்கியோ நிதி மாநாட்டில் பங் கேற்கவரும் உதவிவழங்கும் நாடுகளுடனான கலந்தாலோசனையின் பின்பே வரையப்படும் என்றுள்ளது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு கவுன்சில் திட்டம், ஒரு உறுதியான யோசனையாக முன்வைக்கப்படவில்லை. ஆனால், சர்வதேச சமூகத்தின் வழிகாட்டலில் செயற்படும் ஒரு அமைப்பாகவே வரையறுக்கப்பட்டிருந்தது. இது, தலைவர் பிரபாகரனின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

... பிரதிநிதிகள் நிர்வாகக் கட்டமைப்பினுள் அங்கம் வகிக்க முடியாது என்பதாகும். சுருக்கமான இந்த வரைபு- கொள்கை உருவாக்கல் குழுவின் அதிகாரம், செயற்பாடுகள் என்பவை குறித்து தெளிவான வரைவிலக்கணங்களைத் தரவில்லை. அபிவிருத்தி, புனரமைப்பு கவுன்சிலுக்கான சட்ட அந்தஸ்தையும் தெளிவாக இது வரையறுக்கவில்லை. இந்த கவுன்சிலை, உதவிவழங்கும் நாடுகளே உருவாக்கும் என்பதான விடயமும் முக்கியத்துவமானது. இது உங்கள் யோசனைகளா அல்லது அரசினால் உருவாக்கப்பட்டவையா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், கொழும்பு ஊடகங்கள் ஏற்கனவே புனர்வாழ்வு, புனரமைப்புக்கென மத்திய ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்றை அரசு உருவாக்க ...

தற்போதைய சமாதான முட்டுக்கட்டைகளை நீக்க நீங்கள் எடுக்கும் தளராத முயற்சிகளுக்கு எமது ஆதரவை வழங்கும் அதேசமயம்,

எமது தலைவர் பிரபாகரனின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக பதிலளிக்குமாறு தாங்கள் கோரவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

பிரதமரின் சாதகமான, உறுதியான பதில்மூலம் - சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பது குறித்தும், ஜப்பான் உதவி வழங்கும் கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் எமது தலைமை முக்கிய முடிவுகளை எடுக்க உதவியாக அமையும்.

- என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 97.00 | 97.39 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.98 | 159.45 |
| 1 யூரோ | 112.60 | 114.00 |
| 1 சுவிஸ் பிராங் | 74.30 | 75.67 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.40 | 64.31 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.97 | 25.97 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.